ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2417/14 - 2024 දෙසැම්බර් මස 31 වැනි අඟහරුවාදා - 2024.12.31

*2417/14 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. 3/2013 (ii)

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 44 ஆம் மற்றும் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 321 ஆம் பிரிவின்கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**பிமல் நிரோஷன் ரத்நாயக்க,**
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும்
சிவில் விமானசேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
2024, திசெம்பர் 30.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2024 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (சமவாயஞ்சாராக் கலன்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

பாகம் I

**இவ்வொழுங்குவிதிகளின் ஏற்புடைமை**

2. (1) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம், (3) ஆம் உபஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகள், இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துள்ள சமவாயஞ்சாராக் கலன்களுக்கும் இலங்கை நீர்ப்பரப்புகளில் உள்ளபோது வெளிநாட்டுச் சமவாயஞ்சாராக் கலன்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

1A - PG 6973 — 06 (2025/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) இவ்வொழுங்குவிதிகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது:-

(அ) போர்க்கப்பல்களுக்கும் படையினர் கப்பல்களுக்கும்; அத்துடன்

(ஆ) மீன்பிடிக் கலன்களுக்கும்.

(3) இவ்வொழுங்குவிதிகளின் பாகங்கள் II, IV, V, VI மற்றும் VII என்பன, 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந்தேதிய 2417/16 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (கலனின் வகுப்பாக்கமும் சான்றுப்படுத்துகையும்) ஒழுங்குவிதிகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட தொகுதி 4 – விளையாட்டுக்காக அல்லது பொழுதுபோக்குக்காக (வாடகைக்கல்ல) தனியார் பாவனையிலுள்ள கலன்கள் என வகுதிப்படுத்தப்பட்ட கலன்களுக்கு ஏற்புடையனவாதலாகாது.

(4) இவ்வொழுங்குவிதிகள் இலங்கையில் பாவனைக்காக வலுவுக்குவந்தபின்னர் இறக்குமதிசெய்யப்பட்டவையும் அல்லது கட்டியமைக்கப்பட்டவையும் (3) ஆம் உபஒழுங்குவிதியில் குறிப்பீடுசெய்யப்பட்டவையுமான தொகுதி 4 கலன்கள், இவ்வொழுங்குவிதிகளின் பாகம் III இல் கொடுக்கப்பட்ட தொழில்நுட்பக் கோவைகளுக்கு இசைந்தொழுகுதல் வேண்டும்.

3. (இவ்வொழுங்குவிதிகளில் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி இவ்வொழுங்குவிதிகளின் நிருவாகத்துக்குப் பொறுப்பாதல் வேண்டும்.

## பாகம் II

## பதிவு

4. (1) இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகவுள்ள ஒவ்வொரு கலனும் பின்வரும் செல்லுபடியான சான்றிதழ்களைக் கப்பலில் வைத்திராமல் தொழிற்படுத்தப்படுதலாகாது:-

(அ) பதிவுச் சான்றிதழ்;

(ஆ) 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந்தேதிய 2417/16 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (கலனின் வகுப்பாக்கமும் சான்றுப்படுத்துகையும்) ஒழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்டவாறான சான்றிதழ்கள்;

(இ) பீ மற்றும் ஐ காப்புறுதிச் சான்றிதழ்; அத்துடன்

(ஈ) கப்பற்றொகுதியினரின் உரிமங்களும் பயிற்சிச் சான்றிதழ்களும்;

(2) உபஒழுங்குவிதி (1) றை மீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன்மீது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

5. (1) சமவாயஞ்சாராக் கலனொன்றைப் பதிவுசெய்வதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதித்துரைக்கப்பட்டவாறாக இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை III றில் குறிப்பீடுசெய்யப்பட்ட தோதான கட்டணத்துடன்சேர்த்து கப்பல்களின் பதிவாளருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

(2) விண்ணப்பமானது, இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை I றில் தரப்பட்டுள்ளவாறான படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(3) விண்ணப்பமானது பின்வரும் ஆவணங்களினால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) ஓர் அங்கீகரிக்கப்பட்ட ஏற்றங்கீகரிக்கப்படும் ஒழுங்கமைப்பினால் அல்லது சான்றுபடுத்துகின்றவொரு குழுவினால் வழங்கப்பட்ட தோதான தொழில்நுட்பக் கோவைக்கெதிரான இணங்கியொழுகுகைப் பதிவேடொன்று. தொழில்நுட்பக் கோவைகளில் குறித்துரைக்கப்பட்டவாறு நியம வகுப்பாக்கச் சங்க விதியின் விதிகளுக்குச் சமமானவொன்றுக்கிணங்கக் கட்டியமைக்கப்பட்ட கலன்கள், கோவைகளின் மற்றெல்லாத் தேவைப்பாடுகளுக்கும் இணங்கியொழுகுவதற்கமைய, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் ஏற்றுக்கொள்ளத்தக்கனவாதல் வேண்டும்;

(ஆ) ஆய்வு மற்றும் தொன்னளவு அளவீட்டுச் சான்றிதழ்;

(இ) கலனானது 24 மீற்றர்களுக்கு மேற்படவிருப்பின், தொன்னளவுச் சான்றிதழ்;

(ஈ) உரித்தாவணங்கள் (விற்பனை உண்டியல்);

(உ) ஒரு கம்பெனியின் சார்பில் பதிவுசெய்யப்படின், கம்பெனியின் கூட்டிணைப்புச் சான்றிதழ்;

(ஊ) வேறோர் இடாப்பின்மீது முன்னர் பதிவுசெய்யப்பட்டிருப்பின், நீக்கிவிடுகைச் சான்றிதழ்;

(எ) (ஏற்புடையற்பாலவாறு) வானொலி அழைப்புச் சைகையின் உறுதிப்படுத்துகை; அத்துடன்

(ஏ) கலனின் கப்பற்றொகுதி உறுப்பினர்களையும், பயணிகளையும், சரக்கையும் காப்பீடுசெய்கின்றதும் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்பறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதும் இலங்கைக் காப்புறுதிச் சபையினால் ஏற்றுக்கொள்ளத்தக்க காப்புறுதிக் கம்பெனியொன்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதுமான கலனுக்கான எல்லாமடக்கிய மற்றும் செல்லுபடியுள்ள பீ மற்றும் ஐ காப்புறுதிக் காப்பீடு.

(4) விண்ணப்பமொன்றும் ஆதாரப்படுத்துகின்ற ஆவணங்களும் கப்பல்களின் பதிவாளரினால் பரீசீலனைசெய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் இசைந்தொழுகுவனவாகக் காணப்படின், ஆய்வு பூர்த்திசெய்யப்படும்வரை ஆறுமாதகாலப்பகுதியொன்றுக்குத் தற்காலிகப் பதிவுச் சான்னிதழொன்று வழங்கப்படுதலும் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதியினால் இணங்கியொழுகுகைச் சான்றிதழின் சோதனை பூர்த்திசெய்யப்படுவதன்மேலும் தோதான தொழில்நுட்பக் கோவைச் சான்றிதழ் வழங்கப்படுவதன்மேலும், இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை II இல் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாக முழுமையான பதிவுச் சான்றிதழொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(6) பதிவுச் சான்றிதழானது கலனின் ஆயுட்காலம்வரை செல்லுபடியாதல் வேண்டுமென்பதுடன் கலனின் சொத்தாண்மை மாற்றத்தின்மேல் அல்லது கணிசமானளவிலான மாற்றங்களின்மேல் மட்டுமே மீளவழங்கப்படுதலும் வேண்டும்.

6. (1) இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகும் ஒவ்வொரு கலனும், அக்கலன் தொழிற்பாட்டிலிருக்கையில் கலனின் சான்றுப்படுத்துகையில் கூறப்பட்டவாறு கப்பலில் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச எண்ணிக்கையினரான ஆட்களை விஞ்சுதலாகாது. பயணிசாராக் கலன்களின் விடயத்தில், கலனானது, கலனின் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச எண்ணிக்கையினரான ஆட்கள்வரை கப்பற்றொகுதியினரையும் விசேட ஆளணியினரையும் அல்லது பயணிகள் மற்றும் கப்பற்றொகுதியினரின் சேர்க்கையொன்றையும் அத்துடன் விசேட ஆளணியினரையும் கொண்டுசெல்லலாம்:

ஆயின், இவ்வுபஒழுங்குவிதியின் ஏற்பாடுகள், பன்னிரெண்டுக்குக் குறைவான அதிகபட்ச எண்ணிக்கையினரான பயணிகளைக் கொண்டுசெல்கின்ற கலனொன்றுக்கு ஏற்புடையனவாதலாகாது.

(2) உபஒழுங்குவிதி (1) றை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன்மீது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

7. (1) ஓட்டங்களில் அல்லது படகுத்திரளணிகளில் பங்குபற்றுவதற்காக இலங்கையிலுள்ள விஜயஞ்செய்கின்ற கலன்கள் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் பதிவுசெய்யப்படுவதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓட்டங்களிலான அல்லது படகுத்திரளணிகளிலான படகுகளுக்கான ஆதரவளிக்கும் படகுகளாக இலங்கையிலுள்ள விஜயஞ்செய்கின்ற கலன்கள் பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்து ஆறுமாதங்களுக்குச் செல்லுபடியான தற்காலிகத் தொழிற்பாட்டுப் பதிவைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றன.

(3) தற்காலிகத் தொழிற்பாட்டுப் பதிவுக்கான விண்ணப்பங்கள் இவ்வொழுங்கு விதிகளுக்கான அட்டவணை I றில் குறிப்பீடுசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தையும் ஏற்புடையற்பாலதான கட்டணத்தையும் பயன்படுத்திச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் பின்வரும் ஆவணங்களினால் ஆதாரப்படுத்தப்படுதலும் வேண்டும்:-

(அ) கொடிபறக்கும் அரசின் தேசிய அதிகாரியினால் வழங்கப்பட்ட செல்லுபடியானவோர் ஆய்வறிக்கை; அத்துடன்

(ஆ) கலனுக்கான எல்லாமடக்கிய பீ மற்றும் ஐ காப்புறுதிக் காப்பீடு.

பாகம் III

**தொழில்நுட்பக் கோவைகளும் தொழில்நுட்ப நிபுணர்களின் குழாமும்**

8. (1) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட எல்லாச் சமவாயஞ்சாராக் கலன்களும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வெளியிடப்பட்டவையும் (2) ஆம் உபஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவையுமான ஏற்புடையற்பாலனவான தொழினுட்பக் கோவைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) தொழில்நுட்பக் கோவைகள் பின்வருமாறாகும்:

(அ) உள்ளக நீர்ப்பரப்புகள் மரக்கலக் கோவை;

(ஆ) சிறிய மரக்கலக் கோவை (நீளத்தில் 24 மீற்றர்கள்வரை);

(இ) பெரிய சமவாயஞ்சாரா மரக்கலக் கோவை (நீளத்தில் 24 மீற்றர்களுக்குமேல்); அத்துடன்

(ஈ) பெரிய உலாப்படகுக் கோவை (நீளத்தில் 24 மீற்றர்களுக்குமேல்).

9. (1) அமைச்சர், (இவ்வொழுங்குவிதிகளில் "வணிகக் கப்பற்றொழில் சட்டம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் அவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில், தொழிநுட்பக் கோவைகளை வெளியிடுவதற்கும் பேணுவதற்கும் வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின்கீழ் கையளிக்கப்பட்ட தத்துவங்களுடன் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தலைமைவகிக்கப்பட்டவொரு நிபுணர்களின் தொழில்நுட்பக் குழாத்தை நியமித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய இயைபான கோவைகள் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளியிடப்பட்டவாறானவையாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) தொழில்நுட்பக் குழாத்தின் பணிகள் பின்வருமாறாதல் வேண்டும்:-

(அ) முதலாவது வெளியீட்டிலிருந்து ஓராண்டுக்குப்பின்னர் தொழிநுட்பக் கோவைகளைக் பரீசீலனைசெய்தலும் எவையேனும் திருத்தங்களுக்கான விதப்புரைகளைச் செய்தலும்;

(ஆ) தொழில்நுட்பக் கோவைகளை ஒவ்வோர் ஐந்தாண்டுகளும் பரீசீலனை செய்தலும் காப்புக் காரணங்களுக்காகத் திருத்தங்கள் அவசியமாக்கப்பட்டாலொழிய, திருத்தங்களைச் செய்தலும்; அத்துடன்

(இ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் கோரப்பட்டவாறு ஏற்புடையற்பாலனவான கோவைகளின் பொருள்கோடல்களை வழங்குதல்.

(3) உபஒழுங்குவிதி (1) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட தொழில்நுட்பக் குழாம், கடற்படைக் கட்டடிடக்கலை, கடல்சார் பொறியியல், தலைமைக் கப்பலோட்டி மற்றும் படகுக் கட்டியமைத்தல் தொழிநுட்பவியல் என்ற உயர்தொழில்சார் நிபுணத்துவத் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நான்கு ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) அவ்வாறு நியமிக்கப்பட்ட குழாம் உறுப்பினர்கள் உயர்தொழில்சார்ரீதியில் தகைமைபெற்றவர்களாகவும் அனுபவம் வாய்ந்தவர்களாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன் பின்வருவன போன்ற தோதான உயர்தொழில்சார் குழுவொன்றின் முழு உறுப்பாண்மையையும் (குறைந்தபட்சம் உறுப்பினரொருவராக) வைத்திருத்தலும் வேண்டும்:

(அ) இலங்கைத் தலைமைக் கப்பலோட்டிகளின் கம்பெனி;

(ஆ) இலங்கைப் பிரதான பொறியியலாளர்களின் சங்கம்;

(இ) கடற்படைக் கட்டிடக்கலைஞரின் நிறுவனம் (ஐக்கிய இராச்சியம்);

(ஈ) கடற்படைக் கட்டிடக்கலைஞர்கள் மற்றும் கடல்சார் பொறியியலாளர்களின் சங்கம் (ஐக்கிய அமெரிக்க நாடுகள்);

(உ) கப்பற்றுறை நிறுவகம் (ஐக்கிய இராச்சியம்);

(ஊ) கடல்சார் பொறியியல், அறிவியல் மற்றும் தொழினுட்பவியல் நிறுவகம் (ஐக்கிய இராச்சியம்); அத்துடன்

(எ) இலங்கைப் படகுக் கட்டியமைத்தல் தொழினுட்பவியல் சீராக்க நிறுவகம் (பிடீஐ).

(5) நிபுணர்களின் தொழினுட்பக் குழாத்திலிருந்தான குழாம் உறுப்பினரொருவர் நான்காண்டுக் காலப்பகுதியொன்றுக்குச் சேவையாற்றுவதற்கு நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் நிதியமைச்சினால் குறித்துரைக்கப்பட்ட வீதங்களுக்கிணங்கப் புரியப்பட்ட வேலைக்கான ஊதியத்துக்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

பாகம் VI

**ஆய்வும் சான்றளித்தலும்**

10. (1) எல்லாச் சமவாயஞ்சாராக் கலன்களும் ஏற்புடையற்பாலதான தொழினுட்பக் கோவைக்கிணங்கச் சோதனையிடப்படுதலும், ஆய்வுசெய்யப்படுதலும், சான்றளிக்கப்படுதலும், பேணப்படுதலும் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகவுள்ள சமவாயஞ்சாராக் கலன்களின் சோதனையும் ஆய்வும் மற்றும் அத்தகைய கலன்களுக்குத் தோதான சான்றிதழ்களின் வழங்குகையும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(3) உபஒழுங்குவிதி (3) றுக்கமைய, பணிப்பாளர் தலைமையதிபதி, உபஒழுங்குவிதி (1) றின் நோக்கத்துக்காக ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளுக்கு அல்லது சான்றளிக்கின்ற குழுக்களுக்கு அதிகாரமளிக்கலாம்.

(4) நூறு முழுமொத்தத் தொன்னளவுக்கு மேற்பட்ட சமவாயஞ்சாராக் கலன்களின் ஆய்வு, சோதனை மற்றும் சான்றளிப்பு, ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளினால் மட்டுமே நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

11. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, 2022 ஆம் ஆண்டு சனவரி 6 ஆந்தேதிய 2261/49 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றிதழ்களும்) ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழங்கமைப்புகளுக்கு அதிகாரமளித்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, கணக்காய்வொன்றை நடாத்தியபின்னர் உபஒழுங்குவிதி (3) றில் விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்ற ஒழுங்கமைப்பொன்றை ஒரு சான்றுப்படுத்துகின்ற குழுவாக ஏற்றங்கீகரித்தல் வேண்டுமென்பதுடன் அந்த ஒழுங்கமைப்புடன் எழுத்திலானவோர் உடன்படிக்கையை நிலைநாட்டுதலும் வேண்டும். அத்தகைய உடன்படிக்கை, அதிகாரக் கையளிப்பின் நோக்கெல்லையை வரையறுத்துக்கூறுதல் வேண்டும்.

(3) சான்றளிக்கின்றவொரு குழு:

(அ) உயர்தொழில்சார்ரீதியில் தகைமைபெற்றதாகவும், அனுபவம் வாய்ந்ததாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன் குழுவுக்குக் கையளிக்கப்பட்ட ஆய்வுகளின் பரப்பெல்லையை நிறைவேற்றுவதற்குச் சான்றளிக்கின்ற குழுவினுள் வளங்கள் கிடைக்கக்கூடியனவாக இருத்தலும் வேண்டும்;

(ஆ) 9 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடுசெய்யப்பட்ட தோதான உயர்தொழில்சார் குழுவொன்றின் முழுமையான உறுப்பாண்மையை வைத்திருக்கின்ற உயர்தொழிலர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(இ) கலன்களின் சொந்தக்காரர்களினதும் தொழிற்படுத்துநர்களினதும் தேவைகளை வினைத்திறனாகக் கையாள்வதற்குப் போதிய திறமையையும் ஆற்றலையும் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஈ) தீர்மானம் எம்எஸ்சீ.349(92) மூலம் சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பினால் வெளியிடப்பட்ட ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளுக்கான கோவையின் பிரிவுகள் 2.3, 2.4, 2.5, 2.6, 2.7, 2.8 மற்றும் 4.2 என்பவற்றுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்; அத்துடன்

(உ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்டதும் சான்றளிக்கின்ற குழுவொன்றாகப் பணியாற்றுவதற்கானதுமான அதிகாரவளிப்புக் கடிதமொன்றை வைத்திருத்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (3) றில் விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனைச் சரிபார்ப்பதற்குச் சான்றளிக்கின்ற குழுக்களின்மீது காலாகாலக் கணக்காய்வை நடாத்துதல் வேண்டும்.

பாகம் V

**ஆளமர்த்துகை**

12. வர்த்தகத் தொழிற்பாட்டிலுள்ள எல்லாச் சமவாயஞ்சாராக் கலன்களிலும் இப்பிரிவிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கிணங்க ஆளமர்த்தப்படுதல் வேண்டும்.

13. (1) சமவாயஞ்சாராக் கலனொன்றின்மீதுள்ள கப்பற்றலைவரும் கப்பற்றொகுதியின் ஏனைய உறுப்பினர்களும் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந்தேதிய 2417/17 ஆம் இலக்க, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (உள்நாட்டுக் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ள கப்பல்களில் சேவையாற்றுகின்ற கடலோடிகளுக்கான பயிற்சி, சான்றளித்தல் மற்றும் காவல்காத்தல்) ஒழுங்குவிதிகளுக்கும் வேறு ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கும் இணங்கக் கலனுக்கு ஏற்புடையற்பாலதான தோதான உரிமத்தையும் சான்றிதழ்களையும் வைத்திருத்தல் வேண்டும்.

(2) விசேட தொழிற்பாடுகளைப் பொறுப்பேற்கின்ற அல்லது ஓர் உள்ளூர் இடப்பிரதேசத்தில் தொழிற்படுகின்ற மரக்கலங்களின் மீதான கப்பற்றலைவரும் கப்பற்றொகுதியினரும் தோதான புறக்குறிப்புக்களுடனான உரிமங்களை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(3) இடப்பிரதேச வகுதி 4,5,6,7,8 அல்லது 9 என்பவற்றில் தொழிற்படுகின்ற கலன்களின் கப்பற்றலைவர் மற்றும் கப்பற்றொகுதி உறுப்பினர்கள் ஆரம்ப முதலுதவியில் அங்கீகரிக்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழொன்றை வைத்திருத்தல் வேண்டும்.

(4) இடப்பிரதேச வகுதி OR, 1,2 அல்லது 3 என்பவற்றில் தொழிற்படுகின்ற கலன்களின் கப்பற்றலைவர்கள், கப்பற்றொகுதியின் வேறோர் உறுப்பினர் ஒரு சமமான அல்லது ஓர் உயர்தர மருத்துவ அல்லது தாதித்தொழில் தகைமையை வைத்திருந்தாலொழிய, மருத்துவக் கவனிப்பில் தேர்ச்சிச் சான்றிதழொன்றை வைத்திருத்தல் வேண்டும். கப்பற்றலைவர் அல்லது பெயர்குறித்துநியமிக்கப்பட்ட முதலுதவியாளர் ஆகக்குறைந்தது ஐந்தாண்டுகளுக்கு ஒருதடவையேனும் புதுமுறை ஆதரவுப் பயிற்சிக்கு உட்படுதல் வேண்டும்.

(5) இடப்பிரதேச வகுதி OR, 1,2 அல்லது 3 என்பவற்றில் தொழிற்படுகின்ற கலன்களின் கப்பற்றலைவர்கள், கடலோடிகளின் பயிற்சி, சான்றளிப்பு மற்றும் காவல்காத்தல் கோவையின் (எஸ்டீசீடபிள்யூ கோவை) பிரிவு A-V/2 இல் குறித்துரைக்கப்பட்டவாறு ஆட்கூட்ட முகாமைத்துவப் பயிற்சிச் சான்றிதழொன்றை வைத்திருத்தல் வேண்டும்.

14. (1) கப்பற்றலைவர், ஏதேனும் கடற்பயணம் தொடங்குமுன்னர், கப்பலிலுள்ள எல்லா ஆட்களும், குறைந்தபட்சத்தில், உயிர்காப்புச்சட்டைகள், வெப்பப் பாதுகாப்பு உதவுகருவிகள் மற்றும் உயிர்காப்பு மிதவைகள் போன்ற தனிப்பட்ட காப்புச் சாதனங்களைச் சேகரித்துவைத்தலும் பயன்படுத்துதலும் பற்றி மற்றும் அவசரநிலைமைகளில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றி அறிவுறுத்தப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) கப்பலின்மீது நடாத்தப்பட்ட ஒவ்வோர் அறிவுறுத்தலும் முடிவடைந்தபின்னர் கப்பற்றலைவர் அலுவலகமுறையான பேரேட்டில் பதிவீடொன்றைச் செய்தல் வேண்டும்.

15. சமவாயஞ்சாராக் கலனொன்றின் சொந்தக்காரரும் கப்பற்றலைவரும், கடற்பயணத்தின் தன்மைக்கும் காலநீட்சிக்கும் உரிய கவனஞ்செலுத்தி, கலனைத் தொழிற்படுத்துவதற்குக் கப்பலில் போதிய பயிற்சிபெற்ற ஆளணியினர் உள்ளனரென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

16. ஒவ்வொரு சமவாயஞ்சாராக் கலனும், கப்பலிலுள்ள வானொலிச் சாதனத்துக்காகவும் இயைபான தொழிற்பாட்டு கடற்பரப்புக்காகவும் பொருத்தமான தோதான வானொலித் தொழிற்படுத்துநரின் சான்றிதழை வைத்திருக்கின்ற ஆகக்குறைந்தது ஓர் ஆளையேனும் கொண்டுசெல்லுதல் வேண்டும்.

17. (1) ஒவ்வொரு சமவாயஞ்சாராக் கலனுக்காகவும் ஆகக்குறைந்த ஆளமர்த்துகை மட்டங்கள், ஏற்புடையற்பாலதான தொழினுட்பக் கோவையின்கீழ் கலனுக்கு வழங்கப்பட்ட சான்றிதழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவு ஏற்புடையதாகவுள்ள சமவாயஞ்சாராக் கலனொன்று, கலனின் ஆளமர்த்துகை உபஒழுங்குவிதி (1) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட சான்றிதழில் விதித்துரைக்கப்பட்ட காப்பான ஆளமர்த்துகை மட்டத்துக்கு இணங்கவிருந்தாலொழிய, ஒரு கடற்பயணத்தில் அல்லது சுற்றுலாவில் செல்லுதலாகாது.

(3) உபஒழுங்குவிதி (2) டை மீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்ளிக்கப்படுவதன்மீது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) காப்பான ஆளமர்த்துகைத் தேவைப்பாடுகளுக்கான விண்ணப்பம், சொந்தக்காரரினால் அல்லது அவரது சார்பில் செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் பின்வருவனபற்றித் தெளிவானதும் சுருக்கமானதுமான விளக்கமொன்றை உள்ளடக்குதலும் வேண்டும்:-

(அ) உத்தேசிக்கப்பட்ட ஆளமர்த்துகை மட்டம் எவ்வாறு தீர்மானிக்கப்பட்டது;

(ஆ) வழிகாட்டுகையை அது எவ்வாறு கணக்குக்கெடுக்கின்றது; அத்துடன்

(இ) சோர்வுட்பட, வேலைமணித்தியால ஏற்பாடுகளை அது எவ்வாறு கணக்குக்கெடுக்கின்றது.

(5) காப்பான ஆளமர்த்துகை மட்டத்தைப் பாதிக்கக்கூடிய சமவாயஞ்சாராக் கலனின் சாதனங்களில், நிர்மாணித்தல் அல்லது பாவனையில் ஏதேனும் மாற்றம் ஏற்படும் பட்சத்தில், சொந்தக்காரர் அல்லது தொழிற்படுத்துநர் மீள்வழங்குகைக்கான விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(6) கலனொன்று வியாபாரக் கடற்பரப்பை (கடற்பரப்புகளை), நிர்மாணத்தை, எந்திரத்தொகுதியை அல்லது சாதனங்களை, அல்லது தொழிற்பாட்டை மாற்றுமிடத்தும் பேணுகைமுறை மாறியுள்ளவிடத்தும் அல்லது கலனொன்று ஒழுங்குவிதி 18(2) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஓய்வுமணித்தியாலத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்குத் தொடர்ச்சியாகத் தவறுமிடத்தும், புதியவொரு முன்மொழிவைச் சமர்ப்பிப்பதற்குச் சொந்தக்காரர் ஒருவர் அல்லது தொழிற்படுத்துநர் ஒருவர் தவறினால், ஒரு கலனின் காப்பான ஆளமர்த்துகை மட்டம் மீளப்பெறப்படலாம்.

18. (1) கப்பற்றலைவரும் எல்லாக் கப்பற்றொகுதி உறுப்பினர்களும் வேலையை ஆரம்பிக்கும்போது தகுந்தமுறையில் ஓய்வு பெற்றுள்ளனரென்பதையும் கடமையில் இல்லாதபோது போதிய ஓய்வைப் பெற்றுக்கொள்ளுகின்றனரென்பதையும், நியாயமானமுறையில் செயல்முறைக்கு உகந்ததாகவிருக்கும் அளவுக்குக் கப்பற்றலைவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) கப்பலில் தொழிலுக்கமர்த்தப்பட்ட எவருக்கும் குறைந்தபட்ச ஓய்வு மணித்தியாலங்கள் பின்வருவனவற்றுக்குக் குறைந்தனவாக இருத்தலாகாது:-

(அ) ஏதேனும் 24 மணித்தியாலக் காலப்பகுதியில் பத்து மணித்தியாலங்கள்; அத்துடன்

(ஆ) ஏதேனும் ஏழுநாட் காலப்பகுதியில் 77 மணித்தியாலங்கள்.

(3)விதிவிலக்குகள்கப்பற்றலைவருக்கும்கப்பற்றொகுதிஉறுப்பினர்களுக்குமிடையேஉடன்பட்டுக்கொள்ளப்படும் வரை அவை அனுமதிக்கப்படுகின்றன; ஆயின், அவர்களின் உடனலமும் காப்பும், கலனின் காப்பும் இணக்கப்படுதலாகாது. அத்தகைய விதிவிலக்குகள், கூடுதல் அடிக்கடியான அல்லது கூடுதலாக நீண்ட லீவுக்காலப்பகுதிகளை அல்லது காவல்காத்தல் கடலோடிகளுக்கான அல்லது குறுகிய கடற்பயணங்களின்மீது கப்பல்களில் வேலைசெய்கின்ற கடலோடிக்கான அல்லது கடலோடிகளுக்கான நட்டஈட்டுவகையான லீவு வழங்கப்படுதலைக் கணக்கிற்கெடுக்கலாம்.

19. (1) காவல்காத்தல் ஒழுங்கேற்பாடுகளின் அடிப்படையில் தொழிற்படுகின்ற கலன்களுக்காக, வேலை மற்றும் ஓய்வு மணித்தியாலங்களை எடுத்துக்கூறி கப்பற்றலைவரினால் கடமைகள் பற்றிய அட்டவணையொன்று தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓர் அட்டவணையைத் தயாரிப்பதில், கப்பற்றலைவர் பின்வரும் காரணிகளைக் கணக்குக்கெடுத்தல் வேண்டும்:-

(அ) தொழிற்பாட்டு வகை;

(ஆ) காவல்காத்தல் ஒழுங்கேற்பாடுகளின் விபரங்கள்;

(இ) மொத்த வேலைப்பளு; அத்துடன்

(ஈ) ஒழுங்கற்ற வேலை மணித்தியாலங்களின் பாரதூரமான தன்மையும் சோர்வை ஏற்படுத்துவதற்கு அவற்றின் பங்களிப்பும் நியாயமானமுறையில் நிலையுறுதியான வேலைமணித்தியாலங்களை அட்டவணைப்படுத்துவதன் முக்கியத்துவமும்.

(3) கலனானது தொழிற்பாட்டிலுள்ளபோது தோதான சான்றளித்தலைக் கொண்ட ஆளொருவர் எல்லா நேரங்களிலும் கடற்செலவுசார் காவலுக்குப் பொறுப்பாகவிருப்பதனைக் கப்பற்றலைவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

பாகம் VI

**சரக்கைக் கொண்டுசெல்லுதலும் கடற்செலவின் காப்பும்**

20. (1) சமவாயஞ்சாராக் கலன்களின்மீது சரக்கைக் கொண்டுசெல்லுதல், 2022 ஆம் ஆண்டு சனவரி 6 ஆந்தேதிய 2261/55 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2021 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (சரக்குகளையும் எண்ணெய் எரிபொருட்களையும் கொண்டுசெல்லுதல்) ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க இருத்தல் வேண்டும்.

(2) சமவாயஞ்சாராக் கலன்களின்மீது அபாயகரமான பண்டங்களைக் கொண்டுசெல்லுதல், 2022 ஆம் ஆண்டு சனவரி 6 ஆந்தேதிய 2261/56 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2021 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (அபாயகரமான பண்டங்களைக் கொண்டுசெல்லுதல்) ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க இருத்தல் வேண்டும்.

(3) கடற்பயணத்தின் காப்பு மற்றும் கடற்பயணத்தின் காப்புக்கான சாதனங்கள் என்பன தொடர்பாகச் சமவாயஞ்சாராக் கலனொன்று, 2022 ஆம் ஆண்டு சனவரி 6 ஆந்தேதிய 2261/54 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2021 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (கடற்பயணத்தின் காப்பு) ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

பாகம் VIII

**தொழிற்பாடுசார் தேவைப்பாடுகள்**

21. சமவாயஞ்சாராக் கலனொன்றின் கப்பற்றலைவர் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(1) கலனானது எல்லா நேரங்களிலும் ஒரு காப்பான, கட்டுப்படுத்தப்பட்டவொரு முறையில் கடற்பயணஞ்செய்கின்றதெனவும் ஆய்வுச் சான்றிதழின் நிபந்தனைகளுள் எல்லாம் அமைந்தொழுகப்படுகின்றனவெனவும்;

(2) ஏற்புடையற்பாலனவான நிலையுறுதித் தேவைப்பாடுகள் எல்லா நேரங்களிலும் அமைந்தொழுகப்படுகின்றனவெனவும்;

(3) கடவல் துணைப்பொறிகள், கட்டுப்பாட்டுக்கருவிகள் மற்றும் தொடர்பாடல் முறைமைகள் என்பன ஒவ்வொரு பயணமும் தொடங்கப்படுமுன்னரும் துறைமுகத்தினுட் பிரவேசிக்குமுன்னரும் பரீட்சிக்கப்படுகின்றனவெனவும்;

(4) கலனின் உடற்கோப்பிலுள்ள எல்லாக் கப்பற்றளப்புழைவாயில்களும் துவாரங்களும் பயன்படுத்தப்படும் போது தவிர, இறுக்கமாக மூடப்படுகின்றவென்றும்; அத்துடன்

(5) உட்பிரிவிடுகைத் தடுப்பறைகளிலுள்ள எல்லா நீர்ப்புகாக் கதவுகளும், அறைகளுக்கிடையேயான இடைப்பெயர்வுக்காகப் பயன்படுத்தப்படுகின்றபோதுதவிர, கலனின் கடற்பயணத்தின்போது இறுக்கமாக மூடப்பட்டிருக்கின்றனவெனவும்:

ஆயின், எவ்வாறாயினும், இடர்ப்பாட்டிலுள்ள கலன்களுக்கு உதவுவதற்கு அல்லது வேறு ஒத்த அவசரநிலைமைகளுக்காகக் கப்பற்றலைவர், சான்றிதழில் விதித்துரைக்கப்பட்ட மார்க்கத்திலிருந்து திசைதிரும்பலாம் அல்லது அவசியமானவையும் புத்திசாதுரியமானவையும் எனக் கருதப்படுகின்றவாறான அத்தகைய வேறு நடவடிக்கைகளை எடுக்கலாம்.

22. (1) கடல்சார் இடைநேர்வொன்றில் சம்பந்தப்பட்ட ஒரு கலனின் சொந்தக்காரர், முகவர், கப்பற்றலைவர் அல்லது அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆள், அந்த இடைநேர்வு பின்வருவனவற்றுள் எவற்றுடனும் சம்பந்தப்படும் போதெல்லாம் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு இயன்றளவு விரைவாக அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்:-

(அ) கடற்பயணத்துக்கு, சூழலுக்கு அல்லது கலனின் காப்புக்கு இடையூறொன்றை உருவாக்குகின்ற ஏதேனும் நிலந்தட்டுதல் அல்லது மோதல்;

(ஆ) பிரதான உந்துகை, முதனிலைக் கடவல் அல்லது ஏதேனும் இணைந்த ஆக்கக்கூறின் இழப்பு;

(இ) கட்டுப்பாட்டு முறைமை; அதன் இழப்பு, கலனின் சீரியக்க ஆற்றல்களில் குறைப்பொன்றை ஏற்படுத்துகின்றது;

(ஈ) தீ, வெள்ளப்பெருக்கு, பொருத்தப்பட்ட தீயணைப்பு முறைமைகளின் முறிவு அல்லது சேதம், உயிர்காப்புச் சாதனங்கள், துணைநிலைச் சக்தியைப் பிறப்பிக்கின்ற சாதனங்கள் அல்லது கலவடியகடுகளிலுள்ள நீரை இறைக்கும் முறைமைகள் என்பனவுட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல், கலனின் கடலிற்செல்தகுதன்மையை அல்லது சேவைக்கான தகுதியை அல்லது மார்க்கத்தை முக்கியமானவகையிலும் பாதகமானமுறையிலும் பாதிக்கின்ற ஓர் இடம்பெறுகை;

(உ) உயிரிழப்பு;

(ஊ) முதலுதவிக்கப்பால் உயர்தொழில்சார் மருத்துவச் சிகிச்சையைத் தேவைப்படுத்துகின்றதும், வர்த்தகச்சேவையிலுள்ள ஒரு கலனில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆளொருவரின் விடயத்தில் கலன் தொடர்பான நாளாந்தக் கடமைகளைப் புரிவதற்கு அத்தனியாளைத் தகுதியற்றவராக்குகின்றதுமான ஊறுபாடு; அல்லது

(எ) சேவையாற்றும் நிலைமைக்கு ஆதனத்தை மீட்டெடுப்பதற்குத் தொழிலாளர் மற்றும் பொருட்களுக்கான செலவுதொகை உட்பட, 10,000 ஐஅ டொலருக்கு விஞ்சுதலாகவுள்ளதென மதிப்பிடப்பட்ட ஆதனத்துக்கான சேதத்தை விளைவிக்கின்ற ஓர் இடம்பெறுகை.

(2) உபஒழுங்குவிதி (1) றில் விதித்துரைக்கப்பட்ட அறிவித்தல், சம்பந்தப்பட்டுள்ள கலனின் (கலன்களின்) பெயரையும் அடையாள இலக்கத்தையும், கலனின் சொந்தக்காரரின் அல்லது முகவரின் பெயர், இடைநேர்வின் தன்மையும் சூழ்நிலைகளும், அது இடம்பெற்ற இடப்பிரதேசம், ஆட்களுக்கான ஊறுபாட்டின் தன்மையும் அளவும், ஆதனத்துக்கான சேதம் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(3) உபஒழுங்குவிதி (1) றினால் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து மேலதிகமாக, கலனின் சொந்தக்காரர், கப்பற்றலைவர், முகவர் அல்லது அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆள், மூன்று நாட்களினுள், இதற்கான அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட தோதான அறிக்கையிடுகின்ற படிவங்களைப் பயன்படுத்தி பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விபரங்களை வழங்குதல் வேண்டும்.

23. (1) ஒவ்வொரு கலனும், அதன்மீது அலுவலகமுறையான பேரேடொன்றைப் பேணுதல் வேண்டும். கப்பற்றலைவர் அப்பேரேட்டில் பின்வரும் பதிவீடுகளைச் செய்தல் வேண்டும் அல்லது செய்திருத்தல் வேண்டும்:-

(அ) ஆகக்குறைந்தது ஒவ்வொரு 4 மணித்தியாலங்களுக்கு ஒருதடவையேனும் மார்க்கம் மற்றும் வானிலை நிலைமைகளுட்பட, பயணத்தினதும் இப்பாகத்தில் தேவைப்படுத்தப்பட்ட பரீட்சிப்புகளினதும் விபரங்கள்;

(ஆ) கடல்சார் இடைநேர்வொன்று இடம்பெறும்போது, இடைநேர்வு இடம்பெற்றபின்னர் உடனடியாக அவ்வாறு செய்வது செயல்முறைக்கு உகந்ததாகவிருக்கும்போது அளிக்கப்பட்ட இடைநேர்வுபற்றியதும் மற்றும் அது எச்சூழ்நிலைகளின்கீழ் இடம்பெற்றதோ அச்சூழ்நிலைகள் பற்றியதுமான ஒரு கூற்று;

(இ) கப்பலின்மீதான ஒவ்வோர் இறப்பும் இறப்புக்கான காரணமும்;

(ஈ) கடலோடி எந்நேரத்திலும், எவ்விடத்திலும், எம்முறையிலும், மற்றும் எக்காரணத்துக்காகவும் கப்பற்றொகுதி உறுப்பினரொருவராக இல்லாதொழிந்தாரோ அந்நேரம், அவ்விடம், அம்முறை மற்றும் அக்காரணத்துடன், இறப்பின் மூலம்தவிர, ஒரு கப்பற்றொகுதி உறுப்பினராக இல்லாதொழிகின்ற ஒவ்வொரு கடலோடியினதும் பெயர்; அத்துடன்

(உ) இவ்வொழுங்குவிதிகளில் விதித்துரைக்கப்பட்ட முன்னாயத்தப் பயிற்சிகளினதும் பயிற்சியினதும் விபரங்கள்.

(2) கைவிடப்பட்டவொரு கப்பல், கடலுக்குள் வீழ்ந்த ஆட்கள் மற்றும் தீ முன்னாயத்தப்பயிற்சிகள் தொடர்பில் உபஒழுங்குவிதி (1) னால் தேவைப்படுத்தப்பட்ட பேரேட்டுப் பதிவீடு பின்வரும் தகவல்களை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) முன்னாயத்தப் பயிற்சியினதும் பயிற்சியினதும் தேதி; அத்துடன்

(ஆ) முன்னாயத்தப்பயிற்சிக்காட்சி மற்றும் பயிற்சி விடயங்கள் பற்றிய பொது விவரணம்.

24. கப்பற்றலைவர், பயணிகள் கப்பலில் இருக்கும்போது, 43.3˚C (110˚F) அல்லது அதற்குக் குறைவான பளிச்சீட்டுப்புள்ளி கொண்ட எரிபொருளைக் கப்பலின்மீது எடுத்தலாகாது.

25. தன்னியக்கமான வழிகாட்டி பயன்படுத்தப்படும் போதெல்லாம் கப்பற்றலைவர் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(அ) கலனின் கடவலினது கையினாலான கட்டுப்பாட்டை உடனடியாக நிலைநாட்டுவது எல்லா நேரங்களிலும் இயன்றதாகவுள்ளதெனவும்;

(ஆ) கடவற் கட்டுப்பாட்டைக் கையேற்பதற்குத் தகுதிவாய்ந்த ஆளொருவர் எல்லா நேரங்களிலும் தயாராகவுள்ளாரெனவும்; அத்துடன்

(இ) தன்னியக்கக் கடவலிலிருந்து கையினாலான கடவலுக்கு மாறுதலும் மறுதலையானதும் கப்பற்றலைவரினால் அல்லது காவலிலுள்ள சிரேட்ட அலுவலரினால், அல்லது அவரின் மேற்பார்வையின்கீழ் செய்யப்படுகின்றதெனவும்.

26. (1) பயணமொன்றைச் செய்கின்ற கலனொன்றின் சொந்தக்காரர், வாடகைக்கெடுநர், தொழிற்படுத்துநர் அல்லது கப்பற்றலைவர்:-

(அ) வயதுவந்தோர், சிறுவர்கள் மற்றும் குழந்தைகள் என்போரை வேறு பிரித்துக்காட்டி, பெயர்களும் பாலும் உட்பட, கலனின்மீது ஏறுகின்ற மற்றும் கலனிலிருந்து இறங்குகின்ற எல்லா ஆட்களும்பற்றிச் செம்மையான பதிவேடொன்றை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கலனின்மீது ஏறுகின்ற மற்றும் கலனிலிருந்து இறங்குகின்ற எல்லாப் பயணிகளும் பற்றிய செம்மையான, எழுத்திலான எண்ணிக்கையை வைத்திருத்தல் வேண்டும். ஒரு பயணத்தின்மீது செல்லுமுன்னர், பயணிகளின் எண்ணிக்கை நன்கு அடையாளமிடப்பட்ட ஓரிடத்தில் அல்லது கலனினது சொந்தக்காரரின் அல்லது முகாமைசெய்கின்ற தொழிற்படுத்துநரின் பிரதிநிதியொருவரிடம் கரையில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

27. (1) பயணிகள் கொண்டுசெல்லப்படும் பயணமொன்றை ஆரம்பிக்குமுன்னர், கலனின் தொழிற்பாடுகளுக்கும் ஒழுங்கேற்பாட்டுக்கும் ஏற்புடையற்பாலவாறு, பின்வருவனவற்றை எல்லாப் பயணிகளுக்கும் அறிவித்து பொருத்தமான பகிரங்க அறிவித்தல் கொடுக்கப்படுவதனைக் கலனின் கப்பற்றலைவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(அ) அவசர நிலைமைகள்பற்றிய ஒரு பொது விளக்கம்;

(ஆ) அவசரநிலைமையில் வெளிச்செல்வழிகளினதும் உயிர்காப்பு மரக்கலன்களில் ஏறுமிடங்களினதும் அமைவிடம்;

(இ) உயிர்காப்புச் சட்டைகள் சேகரித்துவைக்கப்படும் இடங்கள்;

(ஈ) ஓர் உயிர்காப்புச் சட்டையை முறையாக அணிதல்பற்றிய செய்து காட்டுகையொன்று உட்பட, கலனின்மீது கொண்டுசெல்லப்படும் வகையினவான உயிர்காப்புச் சட்டைகளை அணிவதற்கும் நேர்த்தியாக்குவதற்குமான சரியான முறை;

(உ) உயிர்காப்புச் சட்டைகள் மற்றும் ஏனைய உயிர்காப்பு உபகரணங்களுக்கான அறிவுறுத்தல் விளம்பர அட்டையின் அமைவிடம்; அத்துடன்

(ஊ) கப்பற்றலைவரினால் பணிக்கப்பட்டவாறு, நிகழ்தகு இடையூறு ஏற்படுத்தும் நிலைமைகள் உள்ளபோது எல்லாப் பயணிகளும் உயிர்காப்புச் சட்டைகளை அணிவதற்குத் தேவைப்படுத்தப்படுவரென்று.

(2) உபஒழுங்குவிதி (1) றுடன் இணங்கியயொழுககின்ற ஓர் அறிவித்தலுக்கு மாற்றாக, கப்பற்றலைவர் அல்லது வேறு பெயர்குறிக்கப்பட்ட ஆள்:-

(அ) பயணத்தை ஆரம்பிக்குமுன்னர், உபஒழுங்குவிதி (1) றில் நிரற்படுத்தப்பட்ட தகவல்களைக் கொண்டுள்ளவோர் அட்டையை அல்லது துண்டுப்பிரசுரத்தை ஒவ்வொரு பயணிக்கும் வழங்கலாம் அல்லது, வாகனங்களைக் கொண்டுசெல்லாததும் ஒவ்வொரு பயணிக்கும் ஆசனங்களை உடையதுமான ஒரு கலனின்மீது ஒவ்வோர் ஆசனத்துக்கருகிலும் இடலாம்; அத்துடன்

(ஆ) பின்வருவனவற்றைக் கொண்டுள்ள சுருக்கமானவோர் அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும்:-

(i) ஓர் அவசரநிலைமையில் பயணிகள், கப்பற்றொகுதியினரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டுமென்றவொரு கூற்று;

(ii) உயிர்காப்புச் சட்டைகள் வைத்திருக்கப்படும் இடம்; அத்துடன்

(iii) ஒவ்வொரு பயணிக்கும் கொடுக்கப்பட்ட அட்டையில் அல்லது துண்டுப்பிரசுரத்தில் காணப்படுகின்ற அல்லது ஒவ்வோர் ஆசனத்திற்கருகிலும் இடப்பட்ட, உயிர்காப்புச் சட்டைகளை அணிதல், வேறு அவசரநிலைமைச் சாதனங்கள் வைத்திருக்கப்படும் இடம் மற்றும் அவசரநிலைமையில் வெளியேற்றுகை நடவடிக்கைமுறைகள் உட்பட, அவசரநிலைமை நடவடிக்கைமுறைகள் சம்பந்தமான மேலதிகத் தகவல்கள்.

(3) பதினைந்து நிமிடங்களுக்குக் குறைவான குறுகிய ஓட்டங்களின்மீது தொழிற்படுகின்ற பயணிக் கலன்கள், கலனின் தனித்துவமான தொழிற்பாடு காரணமாக அறிவித்தல்கள் செயல்முறைக்குகந்தனவல்லவெனப் பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்குமிடத்து, உபஒழுங்குவிதிகள் (1) மற்றும் (2) இல் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தலுக்காகத் தடுப்பறை விளம்பர அட்டைகளை அல்லது சைகைகளைப் பதிலிடலாம்.

(4) பன்னிரெண்டு மணித்தியாலங்களைக்கொண்ட ஒரு பயணத்தின்மீதான கலனொன்றின்மீது, காப்புத் திசைமுகப்படுத்தத்தின்போது உயிர்காப்புச்சட்டைகளை அணிந்து தோதான புறப்படும் நிலையத்துக்குச் செல்லும்படி பயணிகள் அறிவுறுத்தப்படுதல் வேண்டும். தொடக்கத் திரளணி நடாத்தப்பட்டபின்னர் ஒரு சிறிய எண்ணிக்கையினரான பயணிகள் மட்டுமே துறைமுகமொன்றிலிருந்து புறப்படுமிடத்து, இன்னுமொரு திரளணி நடாத்தப்படாவிடின் உபஒழுங்குவிதிகள் (1) மற்றும் (2) இனால் தேவைப்படுத்தப்பட்ட பயணிக் காப்புத் திசைமுகப்படுத்தம் இப்பயணிகளுக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

(5) கலனொன்றின் கப்பற்றலைவர், பின்வருவன உட்பட, ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல், நிகழ்தகு இடையூறு ஏற்படுத்தும் நிலைமைகள் உள்ளபோது உயிர்காப்புச் சட்டைகளை அணியும்படி பயணிகளைத் தேவைப்படுத்துதல் வேண்டும்:-

(அ) இடையூறு ஏற்படுத்தக்கூடிய துறைமுகத்திட்டுகளையும் நுழைவாய்களையும் இடைப்பெயர்ந்து செல்லும்போது;

(ஆ) கடுமையான வானிலையின்போது;

(இ) நிகழ்தகவாக வெளியேற்றுகையைத் தேவைப்படுத்தக்கூடிய வெள்ளப்பெருக்கு, தீ அல்லது வேறு நிகழ்வுகள் ஏற்படும் பட்சத்தில்; அத்துடன்

(ஈ) கலனானது இழுத்துச்செல்லப்படும்போது.

(6) ஓர் அவசரநிலைமை ஏற்படும் பட்சத்தில் எந்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனப் பயணிகள் அறிவதனை இயலச்செய்வதற்குப் போதிய அவசரநிலைமை அறிவுறுத்தல்கள் வெளிக்காட்டிவைக்கப்படுதல் வேண்டும்.

(7) ஓர் அவசரநிலைமை ஏற்படும் பட்சத்தில் உயிர்காப்புச் சட்டைகளை எவ்வாறு அணிவது என்ற நடவடிக்கையைப் பயணிகள் பொறுப்பேற்பதனை இயலச்செய்வதற்குப் போதிய அறிவுறுத்தல்கள் வெளிக்காட்டிவைக்கப்படுதல் வேண்டும்.

(8) ஒரு கலனின் கப்பற்றலைவரும் கப்பற்றொகுதியினரும், தீ, கடுமையான வானிலை அல்லது கடலுக்குள் ஆள் வீழ்ந்துள்ள நிலைமைகள் ஏற்படும் பட்சத்தில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளைக் கொண்டுள்ள அவசரநிலைமை அறிவுறுத்தல்களின் உள்ளீட்டுடன் பரிச்சயமாகவிருத்தல் வேண்டும். அத்தகைய அறிவுறுத்தல்கள், தொழிற்படுத்துகின்ற நிலையத்தில் கிடைக்கக்கூடியனவாதல் வேண்டும்.

(9) பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழிகாட்டுதலாக வழங்கப்படும் விதந்துரைக்கப்பட்ட படிவத்திலிருந்து தேவைப்படுத்தப்பட்ட தகவல்களைக்கொண்டுள்ள அவசரநிலைமை அறிவுறுத்தல் விளம்பர அட்டை ஒழுங்குவிதி (6) றின் தேவைப்பாடுகளைத் திருப்திசெய்தல் வேண்டும்.

(10) பணிப்பாளர்தலைமையதிபதியின்அபிப்பிராயத்தில்ஒருகலனின்தொழிற்பாடுநிரற்படுத்தப்பட்டஇடையூறுகளுள் எவற்றையும் முன்வைக்காதபோதுதவிர, அவசரநிலைமை அறிவித்தல் விளம்பர அட்டை இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை V இல் குறிப்பீடுசெய்யப்பட்ட "அவசரநிலைமை அறிவுறுத்தல்களின்" ஆகக்குறைந்தது ஏற்புடையற்பாலனவான பாகங்களையேனும் கொண்டிருத்தல் வேண்டும். தனிப்பட்ட ஒவ்வொரு கலனினதும் சாதனங்கள், ஒழுங்கேற்பாடு மற்றும் தொழிற்பாட்டைக் கணக்குக்கெடுப்பதற்கு அவசரநிலைமை அறிவுறுத்தல்கள் வடிவமைக்கப்படுதல் வேண்டும்.

(11) கலனின்மீது பொருத்தமான ஏற்றுகின்ற மேற்பரப்பெதுவுமில்லையெனப் பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்குமிடத்து, அவசரநிலைமை அறிவுறுத்தல்களை வெளிக்காட்டிவைக்கத் தேவையில்லை ஆனால் அவை கலனின்மீது கொண்டுசெல்லப்படுதல் வேண்டுமென்பதுடன் பரிச்சயப்படுத்தலுக்காகக் கப்பற்றொகுதியினருக்குக் கிடைக்கக்கூடியனவாதலும் வேண்டும்.

(12) கப்பற்றலைவருட்பட, ஏதேனும் ஒருநேரத்தில் நான்குக்கு மேற்பட்ட கப்பற்றொகுதி உறுப்பினர்களைக் கொண்டிருப்பதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றதும் நீளத்தில் 24 மீற்றர்களுக்கு மேற்பட்டதுமானவொரு கலனின்மீது, தொழிற்படுத்துகின்ற நிலையத்திலும் கப்பற்றொகுதியினருக்கான இடவசதி அளிக்கப்பட்ட இடம் ஒவ்வொன்றிலும் துலாம்பரமானவோர் இடத்திலும் திரளணி நிரலொன்று கப்பற்றலைவரினால் வெளிக்காட்டிவைக்கப்படுதல் வேண்டும்.

(13) உபஒழுங்குவிதி (12) இனால் தேவைப்படுத்தப்பட்ட திரளணி நிரல், பல்வேறு அவசரநிலைமைகளுக்காக ஒவ்வொரு கப்பற்றொகுதி உறுப்பினரினதும் விசேட கடமைகளையும் கடமை நிலையத்தையும் எடுத்துக்கூறுதல் வேண்டும். கடமைகளானவை, இயன்றளவுவரை, தனியாளின் கிரமமான வேலையை ஒத்திருத்தல் வேண்டும். கடமைகள் ஆகக்குறைந்தது பின்வருவனவற்றையேனும் மற்றும் குறிப்பிட்டவோர் அவசரநிலைமையை முறையாகக் கையாள்வதற்கு அவசியமான வேறெவையேனும் கடமைகளை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) உடற்கோப்பை ஊடுருவுகின்ற உள்வாங்கும் மற்றும் வெளியேற்றும் குழாய்களுக்கான கப்பற்றளப்புழைவாயில்களை, காற்றுத்துவாரங்களை, காற்றுப்புகாக் கதவுகளை, வெளிவாயில்களை, வடிபுழைகளை மற்றும் வால்வுகளை மூடிவிடுதல், விசிறிகளையும் காற்றோட்ட முறைமைகளையும் நிறுத்திவிடுதல் மற்றும் எல்லாக் காப்புச் சாதனங்களையும் தொழிற்படுத்துதல்;

(ஆ) உயிர்காப்பு மரக்கலன்களையும் மீட்புப்படகுகளையும் தயாராக்குதலும் கடலில் இறக்குதலும்;

(இ) தீயணைத்தல்; அத்துடன்

(ஈ) பின்வருவன உட்பட, பயணிகளைத் திரளணிப்படுத்தல்:

(i) பயணிகளுக்கு எச்சரிக்கைவிடுத்தல்;

(ii) பயணிகளை ஒன்றுகூட்டி அவர்களின் நியமிக்கப்பட்ட நிலையங்களுக்கு அவர்களை நெறிப்படுத்துதல்; அத்துடன்

(iii) செல்வழிகளிலும் படிக்கட்டுவழிகளிலும் ஒழுங்கைப் பேணுதலும் பயணிகளின் நடமாட்டத்தைக் பொதுவாகக் கட்டுப்படுத்துதலும்.

28. (1) கப்பலைக் கைவிடுதலை, கப்பலிலிருந்து கடலுக்குள் வீழ்ந்துள்ள ஆட்களை மீட்டெடுத்தலை அவசியமாக்குகின்ற மற்றும் கப்பலில் தீ ஏற்படும் பட்சத்திலான அவசரநிலைமைகளின்போது எல்லாக் கப்பற்றொகுதி உறுப்பினர்களும் தமது கடமைகளுடன் பரிச்சயமாகவிருக்கின்றனரென்பதை நிச்சயிப்பதற்குப் போதிய அறிவுறுத்தல்களைக் கொடுப்பதற்குக் கப்பற்றலைவர் பயிற்சியையும் முன்னாயத்தப்பயிற்சிகளையும் நடாத்துதல் வேண்டும்.

(2) பயணிக் கலன்களில், கப்பற்றலைவர், ஒருமாதத்துக்கு ஒரு தடவை கப்பலைக் கைவிடுதல் பற்றிய முன்னாயத்தப்பயிற்சி ஒன்றையும் மற்றும் ஒரு தீ பற்றிய முன்னாயத்தப்பயிற்சியையும் நடாத்துதல் வேண்டுமென்பதுடன் மற்றெல்லாக் கலன்களிலும் இரண்டுமாதங்களுக்கு ஒரு தடவை கப்பலைக் கைவிடுதல் பற்றிய முன்னாயத்தப்பயிற்சி ஒன்றும் ஒரு தீ பற்றிய முன்னாயத்தப்பயிற்சியும் நடாத்தப்படுதலும் வேண்டும்.

(3) கப்பற்றொகுதியினருள் 25 சதவீதத்துக்கு அதிகமானோர் கப்பலின்மீது முன்னைய மாதத்தில் ஒரு முன்னாயத்தப்பயிற்சியில் பங்குபற்றியிராதவிடத்து, கப்பலின் வகையைப் பொருட்படுத்தாது, கப்பற்றலைவர், அத்தகையவொரு கப்பற்றொகுதியினரின் மாற்றத்திலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுள் கப்பலைக் கைவிடுதல் பற்றிய முன்னாயத்தப்பயிற்சியொன்றையும் தீ பற்றிய முன்னாயத்தப்பயிற்சியொன்றையும் நடாத்துதல் வேண்டும்.

(4) கப்பலைக் கைவிடுதல் முன்னாயத்தப்பயிற்சி ஒவ்வொன்றும், செயல்முறைக்குகந்த அளவுவரை, உண்மையாக அவசரநிலைமையொன்று உள்ளது என்றாற்போன்று நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் பின்வருவனவற்றை உள்ளடக்குதலும் வேண்டும்:

(அ) குறித்தளிக்கப்பட்ட நிலையங்களுக்கு வேலைக்குவரும்படியும் குறித்தளிக்கப்பட்ட கடமைகளுக்காகத் தயாராகும்படியும் கப்பற்றொகுதியினரை அழைத்தல்;

(ஆ) ஓர் இரவுநேரப்பயணத்தின்மீது கலனொன்றிலுள்ள பயணிகளைத் திரளணி நிலையங்களுக்கு அல்லது புறப்படும் நிலையங்களுக்கு அழைத்தலும் கப்பலைக் கைவிடுவதற்கான கட்டளை எவ்வாறு கொடுக்கப்படுமென்பதை அவர்கள் அறிவதனை உறுதிப்படுத்துதலும்;

(இ) உயிர்காப்புச் சட்டைகள் சரியாக அணியப்படுவதனைச் செவ்வைபார்த்தல்; அத்துடன்

(ஈ) உயிர்காப்பு மரக்கலன்களின் தன்னியக்க மற்றும் கையினாலான பிரித்தமர்த்தல் பற்றிய அறிவுறுத்தல்கள்.

(5) ஏற்பாடுசெய்யப்படுமிடத்து ஒவ்வொரு மீட்புப்படகும் அதன்மீது அதன் குறித்தளிக்கப்பட்ட கப்பற்றொகுதியினருடன் பின்வருமாறு கடலில் இறக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் உண்மையாக ஆளொருவர் கடலுக்குள் வீழ்ந்துள்ளார் என்ற நிலைமையிற் போன்று நீரில் சீரியக்க ஆற்றலுடன் செயற்படுதலும் வேண்டும்:-

(அ) நியாயமாகவும் செயல்முறைக்குகந்ததாகவும் இருக்குமிடத்து, ஒவ்வொரு மாதமும் ஒருதடவை; ஆனால்

(ஆ) கலனானது பயணிகளுடன் புறப்பட்டுச் செல்லுமுன்னர் மூன்றுமாதகாலப்பகுதியொன்றினுள் ஆகக்குறைந்தது ஒருதடவையேனும்.

(6) ஒவ்வொரு தீ பற்றிய முன்னாயத்தப்பயிற்சியும் செயல்முறைக்குகந்த உண்மையானவோர் அவசரநிலைமை உள்ளது என்றாற்போன்று நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் பின்வருவனவற்றை உள்ளடக்குதலும் வேண்டும்:-

(அ) குறித்தளிக்கப்பட்ட நிலையங்களுக்கு வேலைக்குவரும்படியும் குறித்தளிக்கப்பட்ட கடமைகளுக்காகத் தயாராகும்படியும் அவற்றைச் செய்துகாட்டும்படியும் கப்பற்றொகுதியினரை அழைத்தல்;

(ஆ) ஓர் இரவுநேரப்பயணத்தின்மீது கலனொன்றிலுள்ள பயணிகளைத் திரளணி நிலையங்களுக்கு அல்லது புறப்படும் நிலையங்களுக்கு அழைத்தல்; அத்துடன்

(இ) கப்பலின்மீதுள்ள தீ பற்றிய எச்சரிக்கைகள், தீயணைப்பான்கள் மற்றும் வேறு தீயெதிர்ப்புச் சாதனங்களின் பாவனையிலும் அமைவிடத்திலுமான அறிவுறுத்தல்கள்.

29. சொந்தக்காரரும் கப்பற்றலைவரும் ஒவ்வொரு கலனிலும் பின்வரும் குறியீடுகள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(அ) எல்லா உயிர்காப்புச் சாதனங்களிலும் தீயெதிர்ப்புச் சாதனங்களிலும் கலனின் பெயர் குறியிடப்படுதல் வேண்டும்;

(ஆ) எல்லாத் தப்பிச்செல்லும் கப்பற்றளப்புழைவாயில்களிலும் தப்பிச்செல்லும் வழியாகப் பயன்படுத்தப்படும் வேறு அவசரநிலைமை வெளிச்செல்வழிகளிலும், அத்தகைய குறியீடுகள் அவசியமற்றவையெனப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் கருதப்பட்டாலொழிய, "அவசரநிலைமை வெளிச்செல்வழி, தடைசெய்யவேண்டாம்" என்ற சொற்கள் ஆகக்குறைந்தது 50 மிமீ (2 அங்குல) உயரத்தில் தெளிவாக வாசிக்கக்கூடிய எழுத்துக்களில் இருபக்கங்களிலும் குறியிடப்படுதல் வேண்டும்;

(இ) தொலைவு எரிபொருள் மூடிவிடுகை நிலையங்கள், வால்வின் நோக்கத்தையும் தொழிற்பாட்டுத் திசையையும் சுட்டிக்காட்டி ஆகக்குறைந்தது 25 மிமீ (1 அங்குல) உயரத்தில் தெளிவான, வாசிக்கக்கூடிய எழுத்துக்களில் குறியிடப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) நீர்ப்புகாக் கதவுகளிலும் நீர்ப்புகாக் கப்பற்றளப்புழைவாயில்களிலும் அத்தகைய குறியீடுகள் அவசியமற்றவையெனப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் கருதப்பட்டாலொழிய, "நீர்ப்புகாக் கதவு - மூடிவைக்கவும்" அல்லது "நீர்ப்புகாக் கப்பற்றளப்புழைவாயில் - மூடிவைக்கவும்" என்ற சொற்கள் ஆகக்குறைந்தது 25 மிமீ (1 அங்குல) உயரத்தில் தெளிவாக வாசிக்கக்கூடிய எழுத்துக்களில் இருபக்கங்களிலும் குறியிடப்படுதல் வேண்டும்.

30. ஒவ்வோர் இழுவைப்பெட்டியிலும் அல்லது அதற்கருகிலும் மற்றும் ஒவ்வொரு நிறுத்த வால்வுக் கட்டுப்பாட்டுக்கருவியிலும் அல்லது அதற்கருகிலும் அத்துடன் தீயணைக்கும் பொருளைக் கொண்டுள்ள உருளைகள் களஞ்சியப்படுத்தப்படும் இடத்திலும் துலாம்பரமானவோர் இடத்தில் நிலையான வாயு தீயணைக்கும் முறைமையொன்றின் தொழிற்பாட்டுக்கான பூரணமான ஆனால் எளிமை்யான அறிவுறுத்தல்கள் இடப்படுதல் வேண்டும்.

31. (1) கலனொன்றின்மீதான ஒவ்வோர் இறக்கும் துணைக்கருவியும், ஒவ்வோர் உயிர்காப்பு மரக்கலனும் மற்றும் மீட்புப்படகும், கலனானது துறைமுகத்தை விட்டுச்செல்லுமுன்னரும், கலனானது சென்றுகொண்டிருக்கும்போது எல்லா நேரங்களிலும் நன்கு தொழிற்படும் நிலையிலிருத்தலும் உடனடிப் பாவனைக்குத் தயாராகவிருத்தலும் வேண்டும்.

(2) உயிர்காப்பு மரக்கலன்கள் அல்லது மீட்புப்படகுகள் சேகரித்துவைக்கப்படும் அல்லது அவற்றினுள் ஆட்கள் ஏறும் ஒவ்வொரு மேற்றளமும், உயிர்காப்பு மரக்கலத்தினுள் அல்லது மீட்புப்படகினுள் ஆட்கள் ஏறுவதுடனும் அதனைக் கடலில் இறக்குவதுடனும் தலையிடக்கூடிய முட்டுக்கட்டைகள் இல்லாதிருத்தல் வேண்டும்.

(3) எல்லா உயிர்காப்புச் சாதனங்களும் இவ்வொழுங்குவிதிகளுக்கும் உற்பத்தியாளரின் அறிவுறுத்தல்களுக்கும் இணங்கப் பேணப்படுதல் வேண்டும்.

32. (1) கப்பலின்மீதுள்ள எல்லாச் சாதனங்களுக்காகவும் எந்திரத்தொகுதிக்காகவும் அறிவுறுத்தற் கைந்நூல்கள் கிடைக்கக்கூடியமையைச் சொந்தக்காரர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) கப்பலினதும் அதன் எந்திரத்தொகுதியினதும் சாதனங்களினதும் காப்பு மற்றும் தொழிற்பாடு தொடர்பான எல்லா அறிவுறுத்தற் கைந்நூல்களும், சைகைகளும், வரைபடங்களும், மற்றும் ஆவணங்களும் அரசகருமமொழிகளில் இருத்தல் வேண்டுமென்பதுடன் ஏற்புடையற்பாலவிடத்து, கப்பற்றொகுதியினரின் வேலை மொழிகளில் இருத்தலும் வேண்டும்.

பாகம் VIII

**பொது ஏற்பாடுகள்**

33. (1) இரண்டாயிரத்துப் பதினேழாமாண்டு மே மாதம் 4 ஆந்திகதிய 2017/31 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (சிறிய வர்த்தகக் கலன்கள்) ஒழுங்குவிதிகள் இத்தால் ஒழிக்கப்படுகின்றன.

(2) இரண்டாயிரத்துப் பதினேழாமாண்டு மே மாதம் 4 ஆந்திகதிய 2017/31 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (சிறிய வர்த்தகக் கலன்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் ஏலவே வழங்கப்பட்ட ஆய்வுச் சான்றிதழ், செல்லுபடியாந்தன்மையின் காலஎல்லைக்காகச் செல்லுபடியாகவிருக்கும். ஏலவேயுள்ள சான்றிதழ்கள் முடிவுறுவதன்மேல், கலன்களானவை இவ்வொழுங்குவிதிகளின்கீழ் பதிவுசெய்யப்பட்டு சான்றளிக்கப்படுதல் வேண்டும்.

(3) பயணிக்கலன்களல்லாத ஏலவேயுள்ள கலன்கள், ஒழுங்குவிதிகள் வலுவுக்கு வருவதிலிருந்து அல்லது நடப்பு ஆய்வுச் சான்றிதழ் முடிவுறுவதிலிருந்து, இவற்றுள் எது முன்னர் நிகழ்கின்றதோ அதிலிருந்து ஐந்தாண்டுகளுக்குப் பிந்தாமல் இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(4) ஏலவேயுள்ள பயணிக்கலன்கள், ஒழுங்குவிதிகள் வலுவுக்கு வருவதிலிருந்து அல்லது நடப்பு ஆய்வுச் சான்றிதழ் முடிவுறுவதிலிருந்து, இவற்றுள் எது முன்னர் நிகழ்கின்றதோ அதிலிருந்து ஓராண்டினுள் இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(5) ஏலவேயுள்ள கலன்கள், தொழிற்பாட்டில் இருந்துள்ளமையின் பயனைக்கொண்டு, அவை தற்போது தொழிற்படுகின்ற கடற்பரப்புக்காகக் கட்டமைப்புச்சார் வடிவமைப்பின் நியதிகளின்படி ஏற்றுக்கொள்ளத்தக்க நியமமொன்றைக் கொண்டவையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் 8 ஆம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தொழினுட்பக் கோவைகளில் குறித்துரைக்கப்பட்ட நிர்மாண மற்றும் கட்டமைப்புச்சார் வடிவமைப்பு, நியமங்களை எதிர்கொள்வதற்குத் தேவைப்படுத்தப்படுதலுமாகாது.

(6) ஏலவேயுள்ளவொரு கலனுக்காகத் தொழிற்பாடுகள் பற்றிய கடற்பரப்புக்கான மாற்றங்கள் தேவைப்படின், ஏற்புடையற்பாலதான தொழினுட்பக் கோவைக்கெதிரானவொரு மதிப்பீடு மற்றும் இணங்கியொழுகுகை, தொழிற்பாடுகளின் புதிய கடற்பரப்புக் காரணமாக ஆபத்துக்களின் அதிகரிப்பினதும், கப்பலில் கொண்டுசெல்லப்படும் ஆட்களின் எண்ணிக்கையிலான ஏதேனும் அதிகரிப்புடன் இணைந்துள்ள ஆபத்துக்களின் அதிகரிப்பினதும் அடிப்படையின்மீது பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(7) (அ) ஏலவேயுள்ள எல்லாக் கலன்களும் தொழினுட்பக் கோவைகளுக்கிணங்க நிலையுறுதி ஆவணப்படுத்துகையைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஆ) ஏலவேயுள்ள பயணி மரக்கலன்கள், இவ்வொழுங்குவிதிகள் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஆறுமாதங்களினுள் நிலையுறுதிப் பரீட்சிப்புகளையும் ஆவணப்படுத்துகையையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். கொண்டுசெல்லப்படவேண்டிய பயணிகளின் எண்ணிக்கை, ஏற்புடையற்பாலதான தொழினுட்பக் கோவைக்கிணங்க நிலையுறுதி பற்றிய கரிசனைகளினாலும் இடவரையறைகளினாலும் வரையறுக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) ஏலவேயுள்ள கலனொன்றின்மீது ஏலவே வழங்கப்பட்டதும் ஏற்புடையற்பாலதான கோவையின் தேவைப்பாடுகளை எதிர்கொள்கின்றதுமான நிலையுறுதி ஆவணப்படுத்துகை 33 ஆம் ஒழுங்குவிதியின் 7 ஆம் உபஒழுங்குவிதியின் (அ) என்னும் பந்தியின் தேவைப்பாட்டை எதிர்கொண்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

34. இவ்வொழுங்குவிதிகளில் -

"சட்டம்" என்பது, 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம் என்று பொருளாகும்;

"படகு" என்பது, நீளத்தில் 24 மீற்றர்களுக்குக் குறைவான ஒரு கலன், அல்லது 150 முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான ஒரு கலன் என்று பொருளாகும். படகொன்றானது, ஒரு படகு, காற்று மெத்தை வாகனம், பாய்மர மரக்கலம், காற்றடிக்கத்தக்க மரக்கலம் முதலியனவாக இருக்கமுடியும்;

"சரக்கு" என்பது, கலனுக்கான எரிபொருள்தவிர கலனினால் இடம்பெயர்க்கப்படுகின்ற எல்லா இனங்களும், அடிச்சுமை (ஒன்றில் திண்ம அல்லது திரவ), கப்பலில் பயன்படுத்தப்படவுள்ள நுகர்பொருட்கள், படகின் நிரந்தரக் கருவிகலத்தொகுதி மற்றும் சாதனங்கள், படகுக்கான களஞ்சியப்பொருட்களும் உதிரித் துணைக்கருவிகளும், கப்பற்றொகுதியினரும் அவர்களின் தனிப்பட்ட பயணப்பொதிகளும் மற்றும் பயணிகளும் அவர்களின் தனிப்பட்ட பயணப்பொதிகளும், அத்துடன் செயற்பாடு தொடர்பான சாதனங்கள் என்று பொருளாகும்;

"சான்றளிக்கின்ற குழு" என்பது, எந்தக் கலன்களுக்குச் சமவாயஞ்சாராக் கலன்கள் பற்றிய ஒழுங்குவிதிகள் மற்றும் தொழினுட்பக் கோவைகள் ஏற்புடையனவாகின்றனவோ அந்தக் கலன்களின் பரிசோதனை (ஆய்வு) மற்றும் சான்றளித்தலைப் பணிப்பாளர் தலைமையதிபதி எக்கம்பெனிக்கு அல்லது உயர்தொழிலருக்குக் கையளித்துள்ளாரோ அக்கம்பெனி அல்லது உயர்தொழிலர் என்று பொருளாகும்;

"மரக்கலம்" என்பது, கப்பலைப்போன்ற அதே கருத்துடையது என்று பொருளாகும்;

"உள்நாட்டுப் பயணம்" என்பது, இலங்கையிலுள்ள ஒரு துறைமுகத்திலிருந்து இலங்கையிலுள்ள அதே அல்லது வேறொரு துறைமுகத்துக்கான பயணம் என்று பொருளாகும்;

"ஏலவேயுள்ள மரக்கலம்" என்பது, இவ்வொழுங்குவிதிகள் வலுவுக்குவருகின்ற நேரத்தில் இலங்கையில் ஏலவே தொழிற்பாட்டிலுள்ள ஒரு மரக்கலம் என்று பொருளாகும். இலங்கை நீர்ப்பரப்புகளில் தொழிற்பாட்டிலிராததும் வலுவுக்கு வருகின்ற திகதிக்குமுன்னர் கட்டியமைக்கப்பட்டதுமான ஏதேனும் மரக்கலத்தை இது உள்ளடக்காது;

"முழுமொத்தத் தொன்னளவு (ஜீடி)" என்பது, 1969 ஆம் ஆண்டின் கப்பல்களின் தொன்னளவு அளவீடுபற்றிய சர்வதேசச் சமவாயத்தினால் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறாக என்று பொருளாகும்;

"உள்ளக நீர்ப்பரப்புகள்" என்பது, ஆள்புல நீர்ப்பரப்புகள் எந்த அடிக்கோட்டிலிருந்து அளவீடுசெய்யப்படுகின்றனவோ அந்த அடிக்கோட்டின் நிலம்நோக்கிய பக்கத்திலுள்ள எல்லா நீர்ப்பரப்புகளும் நீர்வழிகளும் என்று பொருளாகும்;

"சர்வதேசப் பயணம்" என்பது, இலங்கையின் ஆள்புல நியாயாதிக்கத்துக்கு வெளியேயான ஒரு பயணம் என்று பொருளாகும்; அதாவது, இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளிலுள்ள ஒரு துறைமுகத்திலிருந்து அல்லது ஒரு துறைமுகத்துக்கு, அல்லது வேறொரு நாட்டின் ஒரு துறைமுகத்துக்கு அல்லது துறைமுகத்திலிருந்து செய்யப்படும் பயணங்கள் என்று பொருளாகும்;

"நீளம்" என்பது, ஒன்றில் அடிக்கட்டையின் மேற்பக்கத்திலிருந்து அளவீடு செய்யப்பட்ட ஆகக்குறைந்த வார்ப்பிட்ட ஆழத்தின் 85 சதவீத நீர்க்கோட்டின்மீது மொத்த நீளத்தின் 96 சதவீதம், அல்லது அந்நீர்க்கோட்டின்மீது தண்டின் முற்பக்கத்திலிருந்து திசைதிருப்புக்கட்டையின் அச்சுவரையான நீளம், இவற்றுள் எது கூடுதலாகவுள்ளதோ அது. அடிக்கட்டைச் சரிவு வடிவமைக்கப்பட்டவொரு படகில், இந்நீளம் எந்த நீர்க்கோட்டின்மீது அளவீடுசெய்யப்படுகின்றதோ அந்த நீர்க்கோடு, வடிவமைப்பு நீர்க்கோட்டுக்குச் சமாந்தரமாகவிருத்தல் வேண்டும்;

"கடல் மைல்" என்பது, 1852 மீற்றர்கள் என்று பொருளாகும்;

"தேறிய தொன்னளவு (என்டீ)" என்பது, 1969 ஆம் ஆண்டின் கப்பல்களின் தொன்னளவு அளவீடு பற்றிய சர்வதேசச் சமவாயத்தினால் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறானதும் தொன்னளவுச் சான்றிதழிற் குறிப்பிடப்பட்டவாறானதுமாகும்;

"சமவாயஞ்சாராக் கலன்கள்" என்பது, ஐஎம்ஓ சமவாயங்கள் அவற்றுக்கு ஏற்புடையனவாகாத கலன்கள் என்றும், கலன்களின் முழுமொத்தத் தொன்னளவு காரணமாக ஏற்புடையனவாகின்ற ஏற்புடையற்பாலனவான ஐஎம்ஓ சமவாயங்களிலிருந்து பணிப்பாளர் தலைமையதிபதி அவற்றுக்கு விலக்களிப்புகளை வழங்கியுள்ள உள்நாட்டுப் பயணங்களின்மீது மட்டுமே தொழிற்படுகின்ற கலன்கள் என்றும் பொருளாகும். கலனின் முழுமொத்தத் தொன்னளவு அல்லது தொழிற்பாட்டுக் கடற்பரப்புக் காரணமாக ஐஎம்ஓ சமவாயங்களின் பாகங்கள் ஏற்புடையற்பாலனவாக உள்ளவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதியினால் விலக்களிப்பு வழங்கப்பட்டிருந்தாலொழிய அவை ஏற்புடையனவாகும்;

"பீ மற்றும் ஐ" என்பது, பாதுகாப்பு மற்றும் நட்டோத்தரவாதக் காப்புறுதி என்று பொருளாகும்;

"வழிகாட்டிப் படகு" என்பது, வழிகாட்டுகைச் சேவைகளில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அல்லது தொழிலுக்கமர்த்தப்படுவதற்கு உட்கருதப்பட்ட ஒரு படகு என்று பொருளாகும் என்பதுடன் 'அர்ப்பணிக்கப்பட்ட வழிகாட்டிப் படகு' என்பது, எத்தகையதுமான அளவினதானதும் வழிகாட்டுகைச் சேவைகளில் பிரதானமாகத் தொழிலுக்கமர்த்தப்பட்டதும் மற்றும் வழிகாட்டுகை மாவட்டத்திலுள்ள படகுகளுக்கு அல்லது அவற்றிலிருந்து ஆளணியினரை, அஞ்சலை அத்துடன் சிறிய அளவினவான களஞ்சியப்பொருட்களைக் கொண்டுசெல்லுதல் போன்ற இடையிடையேயான சேவைகளைப் பொறுப்பேற்கின்றதுமான ஒரு வழிகாட்டிப் படகு என்றும் பொருளாகும்;

"கப்பல்" என்பது, நீளத்தில் 24 மீற்றர்களுக்கு மேற்பட்ட நீரிற் செல்லும் கலனொன்று, அல்லது 150 முழுமொத்தத் தொன்னளவுக்கு மேற்பட்ட கலனொன்று என்று பொருளாகும்;

"கலன்" என்பது, இவ்வொழுங்குவிதிகளில் வரைவிலக்கணங்க கூறப்பட்டவாறான ஒரு கப்பல் அல்லது படகு என்று பொருளாகும்;

"கலத் தொகுதிகள்" என்பது, 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய 2417/16 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கலத்தின் வகுப்பாக்கமும் சான்றுப்படுத்துகையும்) ஒழுங்குவிதிகளினால் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு ஒரு படகின் அல்லது கப்பலின் உட்கருதப்பட்ட பாவனைக்கிணங்க அதனை வகுதிப்படுத்துதல் என்று பொருளாகும்;

"வேலைப்படகு" என்பது, அர்ப்பணிக்கப்பட்டவொரு வழிகாட்டிப்படகு நீங்கலாக, விளையாட்டு அல்லது பொழுதுபோக்குத் தவிர்ந்த நோக்கங்களுக்காக வர்த்தகப் பாவனையிலுள்ள சமவாயஞ்சாராக் கலனொன்று என்று பொருளாகும்.

**அட்டவணை I**

[ஒழுங்குவிதி 5(2)]

சமவாயஞ்சாராக் கலன்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்

குறிப்புகள்:

(அ) இடாப்பானது ஒரு பகிரங்க இடாப்பாகவுள்ளது;

(ஆ) பதிவுச் சான்றிதழொன்று பதிவுக்கான எண்பிப்பாகும்; சொத்தாண்மை பற்றிய சான்றல்ல;

(இ) பதிவுச் சான்றிதழொன்று வழங்கப்படும் வரை கலனொன்று பதிவு செய்யப்பட்டதல்ல என்பதுடன் இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துடையதுமாகாது.

(ஈ) எல்லா விடயங்களிலும் பிரிவுகள் 1 மற்றும் 4 நிரப்பப்படுதல் வேண்டும்.

(உ) கலனானது எவ்வகையிலும் அல்லது வேறொரு நாட்டிலும் முன்னர் பதிவு செய்யப்பட்டிருப்பின் பிரிவு 2 நிரப்பப்படுதல் வேண்டும்;

(ஊ) தற்காலிகத் தொழிற்பாடுகள் பதிவுக்காகப் பிரிவு 3 நிரப்பப்படுதல் வேண்டும்;

(எ) இவ்விண்ணப்பம் தற்காலிகத் தொழிற்பாடுசார் பதிவுக்கானதா : ஆம் இல்லை

(ஏ) விண்ணப்பத்துக்கான காரணம்: 1 ஆவது பதிவு சொத்தாண்மைக் கைமாற்றம்

(ஐ) உள்ளடக்கப்பட்ட கட்டணம்:…………….. ஐஅ டொலர்

| பிரிவு 1 : கலனின் விபரங்கள் | |
|---|---|
| கலனின் பெயர்:<br>(முந்துரிமை ஒழுங்கின்படி பல பெயர்களை உள்ளடக்கவும்) | |
| பதிவுத் துறைமுகம்: | |
| வானொலி அழைப்புச் சைகை: | |
| ஏற்புடையதாயின் வானொலி உரிமமளித்தல் அதிகாரசபையின் பெயரும் முகவரியும்: | |
| ஐஎம்ஓ இலக்கம்: | |
| உடற்கோப்பு அடையாளங்காண் இலக்கம்: | |
| கலனின் வகை: | |
| உடற்கோப்பு நிர்மாணப் பொருள்: | |
| கலனின் நீளம்: | |
| முழுமொத்தத் தொன்னளவு: | |
| தேறிய தொன்னளவு: | |
| கட்டியமைத்த ஆண்டு: | |
| கட்டியமைத்தவரின் பெயரும் முகவரியும்: | |
| கட்டியமைத்த நாடு: | |
| உந்துதலின் வகை: | |
| நிறுவப்பட்ட உந்துதற் சக்தி: | |
| எரிபொருள்: | |
| உத்தேசிக்கப்பட்ட தொழிற்பாட்டுக் கடற்பரப்பு: | |
| கலனின் வடிவமைப்பு வகுதி: | |
| உத்தேசிக்கப்பட்ட ஆளமர்த்துகை: | |

| **பிரிவு 2 : கலனின் வரலாறு –முன்னைய பதிவு விபரங்கள்** | |
|---|---|
| பெயர் (பிரிவு 1 றிலிருந்து வேறுபடின்) | |
| முன்னைய பெயர்கள் : | |
| முன்னைய பதிவிலக்கம் : | |
| முன்னைய பதிவுத் துறைமுகம் : | |
| முன்னைய பதிவு நாடு : | |
| பதிவு செய்யப்பட்ட நீளம் : | |

| **பிரிவு 3 : தற்காலிகத் தொழிற்பாடுசார் பதிவுகளுக்கான விபரங்கள்**<br>குறிப்பு – தற்காலிகத் தொழிற்பாடுசார் பதிவு அதிகபட்சம் ஆறு மாதங்களுக்குக் கிடைக்கக்கூடியதாகுமென்பதுடன் 2023 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (சமவாயஞ்சாராக் கலன்) ஒழுங்குவிதிகளின் 7(3) ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காக மட்டுமே கிடைக்கக்கூடியதுமாகும். | |
|---|---|
| கோரிக்கையின் நோக்கம் | |
| இலங்கை நீர்ப்பரப்புகளில் இருக்கையில் கலனானது புரியும் செயற்பாடுகள் | |
| உள்நாட்டுப் பிரதிநிதியின் / முகவரின் விபரங்கள் | |

| | |
|---|---|
| பீ மற்றும் ஐ காப்புறுதியின் பெயரும் முகவரியும் (காப்புறுதிச் சான்றிதழ் இணைக்கப்படவேண்டும்) | |

| **பிரிவு 4 : விண்ணப்பகாரரின் விபரங்கள்** | |
|---|---|
| விண்ணப்பதாரரின் பெயர் : | |
| விண்ணப்பகாரரின் முகவரி : | |
| தொலைபேசி இலக்கம் : | |
| மின்னஞ்சல் : | |
| சொந்தக்காரரின் பெயரும் முகவரியும் (கலனானது கூட்டிணைக்கப்பட்ட உருவகத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்படின்) : | |
| தவிசாளரின்/ தலைவரின் பெயர் /முகவரி மற்றும் நாட்டினம் : | |
| பணிப்பாளரின் பெயர்கள் / முகவரி மற்றும் நாட்டினம் : | |

………………………………………… என்னுமிடத்தைச் சேர்ந்த ……………………………… ஆகிய நான், இதன்கண் குறிப்பிடப்பட்ட கலனைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை மேற்குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையுமெனச் சான்றுப்படுத்துகின்றேன்.

பெயர்: கையொப்பம் :

திகதி:

(ஒழுங்குவிதி 5(5))

அட்டவணை II

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
**பதிவுச் சான்றிதழ் - சமவாயஞ்சாராக் கலன்கள்**
தற்காலிக /தற்காலிகத் தொழிற்பாடுசார் / முழுமை

கலனின் வகை : *ஆர்ஐபி / மோட்டார் /பாய்மரம்/மோட்டார் அல்லது பாய்மரக் கட்டுமரம்* ……………………
கலனின் தொகுதி : ……………………………………………..
தொழிற்பாட்டுக் கடற்பரப்பு :

கலனின் விபரங்கள்

கலனின் பெயர்:
பதிவிலக்கம்:
ஐஎம்ஓ இலக்கம்: (கிடைக்கக்கூடியதாயின்)
உடற்கோப்பு இல.:
நீளம்:
நிறுவப்பட்ட சக்தி:
முழுமொத்தத் தொன்னளவு:

வேறுபிரித்துக்காட்டும் இலக்கங்கள்:
பதிவுத் துறைமுகம்:
கட்டியமைத்த திகதி*:
உடற்கோப்புப் பொருள்:
உந்துகை:
எரிபொருள் :
தேறிய தொன்னளவு:

*அடிக்கட்டை இடப்பட்ட அல்லது நிர்மாணத்தின் ஒத்தவொரு கட்டத்திலான திகதி அல்லது ஏற்புடையற்பாலவிடத்து பாரிய தன்மையினதான மாற்றத்துக்கான அல்லது ஒரு திருத்தத்துக்கான அல்லது திரிபுக்கான வேலை தொடங்கப்பட்ட திகதி

பதிவுசெய்யப்பட்ட சொத்தாண்மையின் விபரங்கள்

| சொந்தக்காரரின் பெயர்கள் (கள்) | சொந்தக்காரரின் முகவரி (கள்) | வைத்திருக்கப்பட்ட பங்குகள் |
|---|---|---|

இச்சான்றிதழில் நிரற்படுத்தப்பட்ட கப்பலினதும் பதிவுசெய்யப்பட்ட சொத்தாண்மையினதும் விபரங்கள், சமவாயஞ்சாராக் கலன்களின் இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட விபரங்களுக்கிணங்கவுள்ளனவென இத்தாற் சான்றுப்படுத்துகின்றேன்.

தற்காலிக மற்றும் தற்காலிகத் தொழிற்பாடுசார் பதிவுச் சான்றிதழ்கள் வழங்குகைத் திகதியிலிருந்து ஆறுமாதங்களுக்குச் செல்லுபடியாகவுள்ளன.

வழங்கிய இடம் : வழங்குகைத் திகதி

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் /கையொப்பம் சான்றுப்படுத்தும் குழுவின் இலச்சினை அல்லது முத்திரை

(ஒழுங்குவிதி 5(1))

**அட்டவணை III**

ஏற்புடையற்பாலனவான கட்டணங்கள்

<u>சமவாயஞ்சாராக் கலன் - சர்வதேசரீதியில் வியாபாரஞ்செய்கின்றது</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | பதிவுக் கட்டணங்கள் | | |
| | (அ) | சிறிய கலன் (24 மீற்றர்கள்வரை) | 500 ஐஅ டொலரும் ஒரு தேறிய தொன்னுக்கு 1 ஐஅ டொலரும் |
| | (ஆ) | பெரிய சமவாயஞ்சாராக் கலன் (24 மீற்றர்களுக்கு மேல்) | 750 ஐஅ டொலரும் ஒரு தேறிய தொன்னுக்கு 1 ஐஅ டொலரும் |
| 2 | தற்காலிகப் பதிவு (6 மாதங்களுக்குச் செல்லுபடியானது) | | |
| | (அ) | சிறிய கலன் (24 மீற்றர்கள்வரை) | 200 ஐஅ டொலர் |
| | (ஆ) | பெரிய சமவாயஞ்சாராக் கலன் (24 மீற்றர்களுக்கு மேல்) | 400 ஐஅ டொலர் |
| 3 | தற்காலிகத் தொழிற்பாடுசார் பதிவு | | |
| | (அ) | சிறிய கலன் (24 மீற்றர்கள்வரை) | 250 ஐஅ டொலரும் ஒரு தேறிய தொன்னுக்கு 1 ஐஅ டொலரும் |
| | (ஆ) | பெரிய சமவாயஞ்சாராக் கலன் (24 மீற்றர்களுக்கு மேல்) | 400 ஐஅ டொலரும் ஒரு தேறிய தொன்னுக்கு 1 ஐஅ டொலரும் |
| 4 | பதிவுச் சான்றிதழின் மீள்வழங்குகை (சொத்தாண்மை மாற்றத்தின்பின்னர் அல்லது கணிசமானளவிலான திருத்தத்தின்பின்னர்) | | 300 ஐஅ டொலரும் ஒரு தேறிய தொன்னுக்கு 1 ஐஅ டொலரும் |
| 5 | சான்றளித்தலை வழங்குதல் | | |
| | (அ) | சிறிய கலன் கோவைச் சான்றிதழ் | 150 ஐஅ டொலர் |
| | (ஆ) | பெரிய சமவாயஞ்சாராக் கலன் கோவைச் சான்றிதழ் | 200 ஐஅ டொலர் |
| | (இ) | வேறு நியதிச்சட்டச் சான்றிதழ்கள் | ஒவ்வொன்றும் 150 ஐஅ டொலர் |

6 ஆய்வுக் கட்டணங்கள்

(அ) வருடாந்த ஆய்வுக் கட்டணங்கள்

(i) சிறிய கலன் (24 மீற்றர்கள்வரை) 200 ஐஅ டொலர்

(ii) பெரிய சமவாயஞ்சாராக் கலன் (24 மீற்றர்களுக்கு மேல்) 350 ஐஅ டொலர்

(ஆ) புதுப்பித்தல் / விசேட ஆய்வுக் கட்டணங்கள்

(i) சிறிய கலன் (24 மீற்றர்கள்வரை) 350 ஐஅ டொலர்

(ii) பெரிய சமவாயஞ்சாராக் கலன் (24 மீற்றர்களுக்கு மேல்) 500 ஐஅ டொலர்

<u>இலங்கை நீர்ப்பரப்புகளில் வியாபாரஞ்செய்கின்ற சமவாயஞ்சாராக் கலன்கள்</u>

1 பதிவுக் கட்டணங்கள்

(அ) உள்ளக நீர்ப்பரப்புகள் மரக்கலம் 75 ஐஅ டொலரும் ஒரு தேறிய தொன்னுக்கு 1 ஐஅ டொலரும்

(ஆ) சிறிய கலன் (24 மீற்றர்கள்வரை) 250 ஐஅ டொலரும் ஒரு தேறிய தொன்னுக்கு 1 ஐஅ டொலரும்

(இ) பெரிய சமவாயஞ்சாராக் கலன் (24 மீற்றர்களுக்கு மேல்) 500 ஐஅ டொலரும் ஒரு தேறிய தொன்னுக்கு 1 ஐஅ டொலரும்

2 தற்காலிகப் பதிவு (6 மாதங்களுக்குச் செல்லுபடியானது)

(அ) உள்ளக நீர்ப்பரப்புகள் மரக்கலம் 25 ஐஅ டொலர்

(ஆ) சிறிய கலன் (24 மீற்றர்கள்வரை) 100 ஐஅ டொலர்

(இ) பெரிய சமவாயஞ்சாராக் கலன் (24 மீற்றர்களுக்கு மேல்) 250 ஐஅ டொலர்

3 தற்காலிகத் தொழிற்பாடுசார் பதிவு

(அ) உள்ளக நீர்ப்பரப்புகள் மரக்கலம் 75 ஐஅ டொலரும் ஒரு தேறிய தொன்னுக்கு 1 ஐஅ டொலரும்

(ஆ) சிறிய கலன் (24 மீற்றர்கள்வரை) 100 ஐஅ டொலரும் ஒரு தேறிய தொன்னுக்கு 1 ஐஅ டொலரும்

(இ) பெரிய சமவாயஞ்சாராக் கலன் (24 மீற்றர்களுக்கு மேல்) 200 ஐஅ டொலரும் ஒரு தேறிய தொன்னுக்கு 1 ஐஅ டொலரும்

4 பதிவுச் சான்றிதழின் மீள்வழங்குகை (சொத்தாண்மை 150 ஐஅ டொலரும் ஒரு தேறிய மாற்றத்தின்பின்னர் அல்லது கணிசமானளவிலான தொன்னுக்கு 1 ஐஅ டொலரும் திருத்தத்தின் பின்னர்)

5 சான்றளித்தலை வழங்குதல்

(அ) உள்ளக நீர்ப்பரப்புகள் கோவைச் சான்றிதழ் 75 ஐஅ டொலர்

(ஆ) சிறய கலன் கோவைச் சான்றிதழ் 100 ஐஅ டொலர்

| | | |
|---|---|---|
| (இ) | பெரிய சமவாயஞ்சாராக் கலன் கோவைச் சான்றிதழ் | 150 ஐஅ டொலர் |
| (ஈ) | வேறு நியதிச்சட்டச் சான்றிதழ்கள் | ஒவ்வொன்றும் 100 ஐஅ டொலர் |

6 **ஆய்வுக் கட்டணங்கள்**

வருடாந்த ஆய்வுக் கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| (அ) | உள்ளக நீர்ப்பரப்புகள் மரக்கலம் | 80 ஐஅ டொலர் |
| (ஆ) | சிறிய கலன் (24 மீற்றர்கள்வரை) | 150 ஐஅ டொலர் |
| (இ) | பெரிய சமவாயஞ்சாராக் கலன் (24 மீற்றர்களுக்கு மேல்) | 250 ஐஅ டொலர் |

7 **புதுப்பித்தல்/ விசேட ஆய்வுக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| (அ) | உள்ளக நீர்ப்பரப்புகள் மரக்கலம் | 100 ஐஅ டொலர் |
| (ஆ) | சிறிய கலன் (24 மீற்றர்கள்வரை) | 200 ஐஅ டொலர் |
| (இ) | பெரிய சமவாயஞ்சாராக் கலன் (24 மீற்றர்களுக்கு மேல்) | 350 ஐஅ டொலர் |

8 தனியார் கலன்களுக்கான இணங்கியொழுகுகைபற்றிய பதிவேட்டாவணத்தை வழங்குதல் (தொகுதி - 4) – விளையாட்டுக்காக அல்லது பொழுதுபோக்குக்காக (வாடகைக்கல்ல) தனியார் பாவனையிலுள்ள கலன்கள் — 150 ஐஅ டொலர்

## அட்டவணை IV

(ஒழுங்குவிதி 22(3))

| | | | |
|---|---|---|---|
| எம்எஸ்எஸ் | வணிகக் கப்பற்றொழிற் செயலகம் | ஆவண இல. | எஸ்ஆர்-எவ்ஓ-11 |
| | கப்பல் பதிவு மற்றும் காப்பு அலகு | 1 ஆவது வழங்குகைத் தேதி | 2015-12-28 |
| | விபத்து அறிக்கைப் படிவம் | பரிசீலனை செய்தவர் | திரு. |
| | | அங்கீகரித்தவர் | வகபதலைமையதிபதி |
| | | மீளாயப்பட்ட அந்தஸ்து | 0 |
| | | மீளாயப்பட்ட தேதி | |

| | | | | |
|---|---|---|---|---|
| **கலனின் இடைநேர்வு அல்லது விபத்துப்பற்றிய அறிக்கை** | | | | |
| I. கலனின் விபரங்கள் | | | | |
| 1. கலனின் பெயர்/ கொடி | 2. ஐஎம்ஓ இலக்கம் | 3. கட்டியமைக்கப்பட்ட ஆண்டு | 4. முழுமொத்தத் தொன்னளவு | 5. தேறிய தொன்னளவு |
| 6. கலனின் வகை | 7. உந்துகை | 8. கட்டியமைத்த இடம் | | |
| 9. சொந்தக்காரரின் பெயர் | 10. முகாமைக் கம்பெனியின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி | | | |
| 11. (அ) கப்பற்றலைவரின் அல்லது பொறுப்பாகவுள்ள ஆளின் பெயர் | (ஆ) பிரசாவுரிமை | (இ) பிறந்த திகதி | (ஈ) முகவரி | |

| | | | |
|---|---|---|---|
| **II. இடைநேர்வின் விபரங்கள்** | | | |
| 12. (அ) இடைநேர்வுத் தேதி | (ஆ) நேரம் (உள்நாட்டு அல்லது வலயம்) | (இ) யூரீசீ | (ஈ) நாளின் நேரம்<br>பகல்<br>இரவு அந்தி |
| 13. இடைநேர்வின் புவியியற்சார் நிலை<br>அகலாங்கு:<br>நெட்டாங்கு: | | 14. புவியியற்சார் அமைவிடம் | |
| 15. (அ) இடைநேர்வு ஆழ்கடலில் ஏற்பட்டிருப்பின், புறப்பட்ட துறைமுகம் | (ஆ) புறப்பட்ட தேதி | (இ) எந்தத் துறைமுகத்துக்குச் சென்று கொண்டிருந்தது | |
| 16. (அ) சரக்கின் தன்மை (விபரித்து, நீண்ட தொன்களில் தொகைகளைத் தரவும்) | (ஆ) உலர் சரக்கின் தொகை | (இ) தொகையான திரவத்தொகை | (ஈ) கப்பற்றளச் சரக்கின் தொகை |
| 17. இடைநேர்வு ஏற்படுமுன்னர் நீட்டலை அலகுகளில் வேகம் | 18. இடைநேர்வு ஏற்படு முன்னர் உண்மையான மார்க்கம் | 19. முன்னோக்கிய இழுவை | 20. பின்னோக்கிய இழுவை |
| 21. இடைநேர்வு ஏற்பட்ட நேரத்தில் வளிமண்டல நிலைமைகள்<br>தெளிவானது பகுதியளவில் முகிலினால் திண்ம மழை பனி ஏனையவை (குறித்துரைக்கவும்)<br>மங்கலானது மூடப்பட்டது மூடுபனி | | | |
| 22. புலப்பாட்டுத் தூரம்<br>இரண்டு மைல்களுக்குக் குறைவாக<br>2 முதல் 5 மைல்கள் வரை | 23. காற்று<br>வெளிச்சம்<br>மட்டானதிலிருந்து<br>புதிய புயலுக்கும் | 24. கடல்<br>அமைதியானதிலிருந்து<br>சிறிதளவுவரை<br>மட்டானதிலிருந்து | 25. காற்றுத்திசை<br>26. கடலின் திசை<br>27. பொங்குதலின் திசை |
| 5 மைல்களுக்கு மேற்பட | சூறாவளிக்கும் | கொந்தளிப்புவரை<br>உயர்வானது | |
| 28. கடற்பயணச் சாதனங்கள் (பின்வருவனவற்றுள் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றைச் செவ்வைபார்க்கவும்)<br>ராடார் (எஸ்பி அத்துடன் அல்லது X பான்ட் ஏஆர்பீஏ<br>தொழிற்படாதது தொழிற்படாதது<br>பயன்படுத்தப்பட்டது | 29. தொடர்பாடற் சாதனங்கள் (பின்வருவனவற்றுள் ஒன்றை அல்லது அதற்குமேற்பட்டவற்றைச் செவ்வைபார்க்கவும்)<br><u>வானொலித் தொலைபேசி</u>: ஏனைய கலன்களுடன் பாவனையிலுள்ளது; கரையிலுள்ள நிலையங்களுடன் பாவனையிலுள்ளது; பாவனையிலில்லை<br><u>வேறுவகையானதான தொடர்பாடல்</u>: ஏனைய கலன்களுடன் பாவனையிலுள்ளது; கரையிலுள்ள நிலையங்களுடன் பாவனையிலுள்ளது; பாவனையிலில்லை | | |
| 30. உமது கலனினால் தன்னியக்க எச்சரிக்கை அனுப்பப்படுகின்றதா?<br>ஆம் /இல்லை | 31. அந்நேரத்தில் ஏற்புடையற்பாலனவான வீதிவிதிகள்<br>சர்வதேச ஏனையவை (குறித்துரைக்கவும்) | | |

| | | | |
|---|---|---|---|
| எம்எஸ்எஸ் | வணிகக் கப்பற்றொழிற் செயலகம்<br>கப்பல் பதிவு மற்றும் காப்பு அலகு<br>**விபத்து அறிக்கைப் படிவம்** | ஆவண இல. | எஸ்ஆர்-எவ்ஓ-11 |
| | | 1 ஆவது வழங்குகைத் தேதி | 2015-12-28 |
| | | பரிசீலனை செய்தவர் | திரு. |
| | | அங்கீகரித்தவர் | வகபதலைமையதிபதி |
| | | மீளாயப்பட்ட அந்தஸ்து | 0 |
| | | மீளாயப்பட்ட தேதி | |

| சம்பவ வகை (ஆரம்ப இடைநேர்வு நிகழ்வு) | | |
|---|---|---|
| அ | மோதல் | இன்னொரு கப்பலுடன் அடிபடுதல் (ஆழ்கடலில், நங்கூரமிடப்பட்டிருக்கையில், கட்டிவைக்கப்பட்டிருக்கையில் ஏற்பட்டது என்பதைப் பொருட்படுத்தாது) |
| ஆ | தரைதட்டுதல் /நிலந்தட்டுதல் | நிலந்தட்டியிருத்தல் அல்லது கரையை அல்லது கடலடியை அல்லது நீரின்கீழான பொருட்களை (அழிவுபாடுகள்) தொடுதல் |
| இ | தொடர்பு | மோதலில் உள்ளடக்கப்பட்டவைதவிர ஏதேனும் நிலையான அல்லது மிதக்கும் பொருளுடன் அடிபடுதல் |
| ஈ | தீ அல்லது வெடித்தல் | |
| உ | உடற்கோப்பு முறிவு | மேலேயுள்ள எவற்றினாலும் விளைவிக்கப்படாதது |
| ஊ | எந்திரத்தொகுதிக்கான சேதம் | இழுத்துச் செல்வதை அல்லது கரை உதவியை அவசியமாக்கியது |
| எ | கப்பலுக்கான சேதங்கள் | மேலேயுள்ள எவற்றினாலும் விளைவிக்கப்படாதது |
| ஏ | கப்பல் கவிழ்தல் / நிரம்படுத்துதல் | மேலேயுள்ள எவற்றினாலும் விளைவிக்கப்படாதது |
| ஐ | காணாமற்போனமை: இழக்கப்பட்டதென ஊகிக்கப்பட்டமை | |
| ஒ | தொழிலாளர் | |
| ஓ | ஏனையவை | மேலேயுள்ள எவற்றினாலும் மேவப்படாத வேறேதேனும் |

33. இடைநேர்வின் விவரணம் (இடைநேர்வுக்கு இட்டுச்சென்றவையும் அது ஏற்பட்டபோது இருந்தவையுமான நிகழ்வுகளும் சூழ்நிலைகளும். அவசியமாயின், படத்தையும் மேலதிகத்தாள்களையும் இணைக்கவும்.)

| 34. ஆளணியினரின் எண்ணிக்கை | கப்பற் றொகுதியினர் | பயணிகள் | ஏனையோர் | மொத்தம் | 35. மதிப்பிடப்பட்ட ஆதன இழப்புகள் |
|---|---|---|---|---|---|
| (அ) கப்பலின்மீது | | | | | (அ) கலனுக்கு |
| (ஆ) இறந்துள்ளோர் | | | | | (ஆ) சரக்குக்கு |
| (இ) காணாமற்போனோர் | | | | | (இ) ஏனைய ஆதனத்துக்கு |
| (ஈ) ஊறுபாடுற்றோர் | | | | | 36. கலனானது முற்றாக அழிந்துள்ளதா?<br>ஆம் இல்லை |

37. குறிப்புகள் (கரையிலுள்ள நிலையங்களினாலும் கலன்களினாலும் அளிக்கப்பட்ட உதவியைச் சுட்டிக்காட்டவும்; திருத்தக் காப்பு வழிமுறைகளுக்கான விதப்புரைகள். அவசியமாயின், மேலதிகத்தாள்களை இணைக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| 38. இடைநேர்வு ஏற்பட்ட நேரத்தில் கடமையிலிருந்த கப்பற்றள அலுவலர் | | 39. இடைநேர்வு ஏற்பட்ட நேரத்தில் கடமையிலிருந்த பொறியியலாளர் | |
| பெயர் | | பெயர் | |
| பதவி | உரிம இல. | பதவி | உரிம இல. |
| 40. அறிக்கைத்தேதி | 41. சமர்ப்பித்தவர் (பெயரை அச்சிடவும்) | 42. கையொப்பம் | 43. தலைப்புப்பெயர் |

| | | | |
|---|---|---|---|
| எம்எஸ்எஸ் | வணிகக் கப்பற்றொழிற் செயலகம்<br>கப்பல் பதிவு மற்றும் காப்பு அலகு<br>**விபத்து அறிக்கைப் படிவம்** | ஆவண இல. | எஸ்ஆர்-எவ்ஓ-11 |
| | | 1 ஆவது வழங்குகைத் தேதி | 2015-12-28 |
| | | பரிசீலனை செய்தவர் | திரு. |
| | | அங்கீகரித்தவர் | வகபதலைமையதிபதி |
| | | மீளாயப்பட்ட அந்தஸ்து | 0 |
| | | மீளாயப்பட்ட தேதி | |

**தனிப்பட்ட ஊறுபாடு அல்லது உயிரிழப்புப் பற்றிய அறிக்கை**

**I. கலனின் விபரங்கள்**

| | | |
|---|---|---|
| 1. கலனின் பெயர் | 2. ஐஎம்ஓ இலக்கம் | 3. முகாமைக் கம்பெனியின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி, தொலைநகல் இல. |
| 4. கலனின் வகை | 5. உந்துகை | |
| 6. சொந்தக்காரரின் பெயரும் முகவரியும் | | |

**II. ஊறுபாடுற்ற, இறந்துள்ள அல்லது காணாமற்போன (இறந்துள்ளவரென நம்பப்படுகின்றன) ஆளின் விபரங்கள்**

| | | |
|---|---|---|
| 7. (அ) ஆளின் பெயர் | 8. (ஆ) வீட்டு முகவரி | (இ) பிறந்த தேதி |
| | | (ஈ) பிரசாவுரிமை |
| 8. கடலோடியின் புத்தக அல்லது கடவுச்சீட்டில. | 9. கலனின்மீதான அந்தஸ்து அல்லது பதவி | |
| 10. இடைநேர்வு ஏற்பட்ட நேரத்தில் ஈடுபட்டிருந்த செயற்பாடு | 11. கப்பற்றொகுதியுறுப்பினராயின் அல்லது கரையிலுள்ள வேலையாளராயின் காவலின்மீதுள்ளவர் வேலைசெய்கின்றவர் ஏனையோர் | |
| 12 (அ) இடைநேர்வு ஏற்பட்ட நேரத்தில் உடனடி மேற்பார்வையாளரின் பெயர் | (ஆ) கலனின்மீது மேற்பார்வையாளரின் பதவி அல்லது அந்தஸ்து | |

**III. இடைநேர்வின் அல்லது விபத்தின் விபரங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 13. (அ) இடைநேர்வு ஏற்பட்ட தேதி | (ஆ) நேரம் (உள்நாட்டு அல்லது வலயம்) | (இ) யூரீசீ | (ஈ) நாளின் நேரம் பகல் இரவு அந்தி |
| 14. இடைநேர்வு ஏற்பட்ட நேரத்தில் கலனின் புவியியற்சார் அமைவிடம் | | | |
| 15. (அ) இடைநேர்வு ஆழ்கடலில் ஏற்பட்டிருப்பின், புறப்பட்ட துறைமுகம் | (ஆ) புறப்பட்ட தேதி | (இ) எந்தத் துறைமுகத்துக்குச் சென்று கொண்டிருந்தது | |
| 16. (அ) இடைநேர்வின் விளைவு : | | | |
| ஊறுபாடு இறப்பு காணாமற்போனமை (தோதானவாறு, கீழேயுள்ள ஊறுபாட்டு அல்லது இறப்புப்பதிவீடுகளை நிரப்பவும்) | | | |
| (ஆ) ஊறுபாட்டின் தன்மை | (இ) இயலாமைக்குட்பட்ட மொத்த நாட்கள் | | |
| (ஈ) இறப்புக்கான காரணம் | (உ) இறப்பின்போது தனியாள் இருந்த இடம் | | |
| | (ஊ) இறப்புத் தேதி | | |

| | | | |
|---|---|---|---|
| எம்எஸ்எஸ் | வணிகக் கப்பற்றொழிற் செயலகம்<br>கப்பல் பதிவு மற்றும் காப்பு அலகு<br>விபத்து அறிக்கைப் படிவம் | ஆவண இல. | எஸ்ஆர்-எவ்ஓ-11 |
| | | 1 ஆவது வழங்குகைத் தேதி | 2015-12-28 |
| | | பரிசீலனை செய்தவர் | திரு. |
| | | அங்கீகரித்தவர் | வகபதலைமையதிபதி |
| | | மீளாயப்பட்ட அந்தஸ்து | 0 |
| | | மீளாயப்பட்ட தேதி | |

| | |
|---|---|
| இடைநேர்வின் விவரணம் (இடைநேர்வுக்கு இட்டுச்சென்ற நிகழ்வுகளையும் அது எவ்வாறு ஏற்பட்டதென்பதையும் தரவும். அவசியமாயின், படத்தையும் மேலதிகத்தாள்களையும் இணைக்கவும்) | |
| 17. விபத்துக்கான சாட்சிகள் (இயலுமாயின், ஆகக்குறைந்தது இருவரேனும்) | |
| பெயர் | பெயர் |
| முகவரி | முகவரி |
| பெயர் | பெயர் |
| முகவரி | முகவரி |
| IV. உதவியும் விதப்புரைகளும் | |

| | | | |
|---|---|---|---|
| 18. (அ) அனுப்பப்பட்ட மெடிகோ (மருத்துவ) செய்தி | (ஆ) ஆம் எனில், முதலாவது செய்தியின் தேதியைத் தரவும் | | (இ) ஆம் எனில், முதலாவது செய்தியின் நேரத்தைத் தரவும் (உள்நாட்டு அல்லது வலயம் மற்றும் விவரணம்) |
| 19. (அ) அளிக்கப்பட்ட சிகிச்சை<br>ஆம் இல்லை | (ஆ) ஆம் எனில், எவரால் ? | | |
| | கப்பலின் மருத்துவர் | வேறு ஏதேனும் கப்பலின் ஆளணியினர் | ஏனையோர் (குறித்துரைக்கவும்) |
| 20. சிகிச்சையைச் சுருக்கமாக விவரிக்கவும் (மருத்துவர் அல்லாதவரினால் அளிக்கப்பட்டிருப்பின்) | | | |
| 21. (அ) ஆள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பின் வைத்தியசாலையின் பெயர் | (ஆ) வைத்தியசாலையின் முகவரி | | |
| 22. இவ்விடைநேர்வு தொடர்பான திருத்தக் காப்பு வழிமுறைகளுக்கான விதப்புரைகள் | | | |

| | | | |
|---|---|---|---|
| 23. அறிக்கைத் திகதி | 24. சமர்ப்பித்தவர் (பெயரை அச்சிடவும்) | 25. கையொப்பம் | 26. தலைப்புப் பெயர் |

## அட்டவணை V

(ஒழுங்குவிதி 27(10))

விதந்துரைக்கப்பட்ட அவசரநிலைமை அறிவுறுத்தல்கள் படிவம்

பின்வரும் தகவல்களைக்கொண்ட ஓர் அவசரநிலைமை அறிவுறுத்தல் விளம்பர அட்டை, வாசகம் 77 இன் தேவைப்பாடுகளைத் திருப்திசெய்யும்.

அவசரநிலைமை அறிவுறுத்தல்கள்

கடலில் கொந்தளிப்பான வானிலை, இடையூறான துறைமுகத்திட்டுக்களை கடத்தல் அல்லது வெள்ளப்பெருக்கு:-

1. கப்பலினுள் நீர் புகுவதனைத் தடுப்பதற்கு எல்லா நீர்புகா மற்றும் வானிலை தாக்காக் கதவுகளையும். கப்பற்றளப்புழைவாயில்களையும், காற்றுக்குழாய்களையும் மூடிவிடவும்.
2. கலவடியகடுகளிலான நீர்காரணமாக நிலையுறுதியிழப்பைத் தடுப்பதற்குக் கலவடியகடுகளை உலர்ந்தவையாக வைத்திருக்கவும். நீரை வெளியேற்றுவதற்கு மின்சக்தியினால் உந்தப்பட்ட கலவடியகடுப் பம்பியை, கைப்பம்பியை மற்றும் வாளிகளைப் பயன்படுத்தவும்.
3. அனுமதிக்கப்பட்டவிடத்து கலவடியகடுப் பம்பிகளாகப் பயன்படுத்தப்படுவதற்குத் தீப்பம்பிகளை ஒழுங்கேற்பாடுசெய்யவும்.
4. ஒழுக்குக்காக, உடற்கோப்பை ஊடுருவுகின்ற எல்லா உள்வாங்கு மற்றும் வெளியேற்றல் குழாய்களைச் செவ்வைபார்க்கவும்.
5. கப்பற்றலைவரினால் பணிக்கப்பட்டவாறு பயணிகள் அமர்ந்திருத்தலும் சமமானமுறையில் பகிர்வுசெய்யப்படுதலும் வேண்டும்.
6. கப்பற்றலைவரினால் அறிவுறுத்தப்படும்போது பயணிகள் உயிர்காப்புச் சட்டைகளை அணிதல் வேண்டும்.
7. உதவி தேவைப்படுமிடத்து, வானொலி- தொலைபேசிக்கருகில் வெளிக்காட்டப்பட்ட அவசரநிலைமை ஒலிபரப்பு விளம்பர அட்டையின்மீதுள்ள நடவடிக்கைமுறைகளைப் பின்பற்றவும்.
8. கடலில் இறக்குவதற்காக உயிர்காப்பு மரக்கலன்களை (உயிர்காப்பு மிதவைகள்), (காற்றடிக்கத்தக்க) தெப்பங்கள், (காற்றடிக்கத்தக்க) மிதக்கும் துணைக்கருவிகள், படகுகள்) என்பவற்றைத் தயாராக்கவும்.
9. கப்பற்றலைவரின் அபிப்பிராயத்தில் ஆட்கள் கப்பலிலிருக்கும் ஆபத்து கலனிலிருந்து வெளியேறுகின்ற ஆபத்தை விஞ்சினாலொழிய, கப்பலைக் கைவிடுவதற்கான அறிவுறுத்தல்கள் கொடுக்கப்படுதலாகாது.

ஆள் கடலுக்குள் வீழ்தல்:-

1. இயன்றளவு ஆளுக்கண்மையில் கப்பலுக்குவெளியே ஓர் உயிர்காப்பு மிதவையை வீசவும்.
2. கப்பலுக்குவெளியே வீழ்ந்த ஆளைக் கண்ணுக்குத் தெரியக்கூடியவகையில் ஒரு கண்காணிப்பாளரை அமர்த்தவும்.
3. மீட்புப்படகை கடலுக்குள் இறக்கி நீரிலுள்ள ஆளை ஏற்றுவதற்குச் சீரியக்கமுறுத்தவும் அல்லது நீரிலுள்ள ஆளை ஏற்றுவதற்குக் கலனைச் சீரியக்கமுறுத்தவும்.
4. ஒரு கப்பற்றொகுதியுறுப்பினருக்கு உயிர்காப்புச் சட்டை அணிவித்து, அவ்வுறுப்பினரின் உடம்பில் ஒரு காப்புக்கயிற்றை இணைத்து, அவசியமாயின் கப்பலுக்குவெளியே வீழ்ந்த ஆளை உதவுவதற்கென நீரினுள் பாய்வதற்கு அவ்வுறுப்பினரைத் தயாராக்கவும்.
5. ஆளை உடனடியாகக் கண்டுபிடிக்கமுடியாதவிடத்து, வானொலித் தொலைபேசிமூலம் இலங்கைக் கடற்படைக்கும் சுற்றுச்சூழலிலுள்ள வேறு கலன்களுக்கும் அறிவிக்கவும்.
6. இலங்கைக் கடற்படையினால் தொடர்ந்து தேடுதல் நடாத்தப்படும்வரை அல்லது தேடுதலைத் தொடருதல் செயல்முறைக்குகந்ததல்லதெனக் கப்பற்றலைவர் கருதும்வரை தேடுதலைத் தொடரவும்.

*தீ:-*

1. கப்பற்றளப்புழைவாயில்கள், காற்றுப்புழைகள், கதவுகள், காற்றோட்டக் கருவிகள் மற்றும் காற்றுக் கூண்டுகள் போன்ற தீக்கண்மையிலுள்ள இனங்களுக்கான காற்று வழங்கலைத் துண்டிக்கவும் அத்துடன் காற்றோட்ட முறைமையை மூடிவிடவும்.
2. இயலுமாயின் பாதிக்கப்பட்ட அறைக்கு மின்சாரம் வழங்குகின்ற மின்சார முறைமையைத் துண்டிக்கவும்.
3. பொருத்தப்பட்டவிடத்து நிலையான தீயணைப்பு முறைமையை வேறிடத்தில் பிரித்தமர்த்தவும்.

4. காப்பாகவுள்ளவிடத்து, பற்றிஎரியத்தக்க திரவ அல்லது மசகெண்ணெய் தீக்களுக்காகச் சுடர்களின் அடியில் காவத்தக்க தீயணைப்பான்களை அல்லது சாதாரண எரியத்தக்க பொருட்களிலான தீக்களுக்காக நீரை உடனடியாகப் பயன்படுத்தவும். மின்சாரத் தீ யின்மீது நீரைப் பயன்படுத்தவேண்டாம்.
5. தீயானது எந்திரத்தொகுதி இடங்களில் ஏற்பட்டிருக்குமிடத்து, எரிபொருள் வழங்கலையும் காற்றோட்டத்தையும் மூடிவிடவும்; நிறுவப்பட்டிருப்பின் நிலையான தீயணைக்கும் முறைமையைச் செயலூக்குவிக்கவும்.
6. தீயின்மீது காற்றின் தாக்கத்தை மிகக்குறைந்ததாக்குவதற்குக் கலனைச் சீரியக்கமுறுத்தவும்.
7. தீயைக் கட்டுப்படுத்த இயலாதவிடத்து, வானொலி – தொலைபேசிமூலம் இலங்கைக் கடற்படைக்கும் சுற்றுச்சூழலிலுள்ள வேறு மரக்கலன்களுக்கும் அறிவிக்கவும்.
8. பயணிகளைத் தீயிலிருந்து விலக்கவும், அவர்களை உயிர்காப்புச் சட்டைகளை அணியச் செய்யவும் மற்றும் அவசியமானவிடத்து, கலனைக் கைவிடுவதற்குத் தயாராகவும்.

EOG 01 - 0009

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.